# தொண்டன்

★ சமாதானத்தை இழந்து நாம் துன்பப்படுவது ஒருநிகழ்ச்சியாக இருந்த காலம் மாறி அது ஒரு சரித்திரமாக உருவெடுப்பதைக் காண்கிறோம்.

- பக் 1

★ இலங்கையில் கிராமங்களில் 50 வீதத்தினரும், நகரங்களில் 30 வீதத்தினரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

- பக் 4

★ இலங்கையிலும் கிறிஸ்தவ சமயத்தாபனத்தாரால் முதல் பத்திரிகை வெளியிடப்பட்டது.

- பக் 12

★ ஈழத்து நாடகங்களுக்கு ரூபவாஹினி தான் அளவு கோலா - ஒரு மறுப்பு.

- பக் 25

★ ஒவ்வொரு கிறிஸ்தவனும் சமூகவாழ்வில் பங்கெடுத்துச் சமூகத்தினூடாகவே தன்னுடைய இரட்சணியத்தை உறுதிப்படுத்திக் கொள்கிறான்.

- பக் 21

1989 ஜூலை

தொண்டன்

ஜூலை - 1989

மலர்: 21 இதழ்: 05

ஆசிரியர்:
கிங்ஸ்லி றெபட்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:
எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்
பி. ஜோசப்

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு./மட். மறை மாவட்டம்.

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

## உள்ளே...

1. எமது குரல் — 1
2. யேசுவைத் துதிப்போம் — 2
3. வறுமை ஒழிப்பு — 3
4. மாணவர் பக்கம் — 7
5. மரியாயின் சேனை... — 9
6. இளைஞர் அரங்கம் — 10
7. அச்சுத்துறையும்... — 11
8. சந்தனச் சிதறல்கள் — 13
9. இருக்கும் இடத்தில்... — 16
10. உன்னை நான்... — 17
11. நம்மைச் சுற்றி... — 20
2 பரஸ்பர அன்பு... — 24
13. ஈழத்து நாடகங்கள்... — 25
14. நிறைவு — 26
15. விவிலியப் புதிர் — 27

## எழுதுங்கள் !

தொண்டன் சஞ்சிகைக்கு எழுதுங்கள். உங்கள் ஆக்கங்களினால் இதனை அலங்கரியுங்கள். சுருக்கமாக, சுவையாக, பெரிதாக எழுதுங்கள். பிரசுரமாகும் ஆக்கங்களுக்குச் சன்மானம் உண்டு.

ஆ — ர்

# எமது குரல்

எப்போது எமக்கு விடிவு வரப்போகின்றதோ என்ற சாதாரண மனிதனுடைய அங்கலாய்ப்பு ஒரு தொடர்கதையாகவே நீண்டுகொண்டிருப்பதை எமது நாட்டின் இன்றைய சூழ்நிலையும், நிகழ்வுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

பாடசாலைகள் இயங்காத நிலை:

பல ஆண்டுகளாகப் படிப்படியாகச் சீர்குலைந்திருந்த மாணவர்களின் கல்வி ஒருவாறு சீரடைந்து பயனளிக்கும் பாதையில் சென்றபோது மீண்டும் திடீர் முறிவு. கல்வி முறையில் அடிக்கடி செய்யப்படும் மாற்றங்களினால் மனமுடைந்து அதையும் ஒருவாறு சமாளிக்க மாணவர்களும் ஆசிரியர்களும் முயலும்போது மீண்டும் கொந்தளிப்பு. இவைகளுக்கு ஒரு முடிவே கிடையாதா? எமக்கு விடியலின் பாதை தெரியவே மாட்டாதா என்ற வேதனை மிகு குரலொலி எங்கும் இன்று புரையோடிக் கிடக்கின்றது.

போக்குவரத்துச் சீர்குலைவு:

அன்றாடம் அல்லல்பட்டு உழைப்பவர்களுக்கு இன்னுமொரு பேரிடி. எமது பகுதியில் மட்டுமல்ல, நாடளாவிய முறையில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் சீர்குலைவு எவ்வளவு பாதிப்பைத்தான் ஏற்படுத்தியுள்ளது. ஒழுங்காக எதையும் செய்யமுடியாத நிலை எங்குமே செல்லமுடியாத நிலை. இவைகள் இன்று நம் மத்தியிலே மனவிரக்தியையும், மனக்கசப்பையும் உருவாக்குவதைத் தடுக்க முடியாத நிலை.


இவைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன?

நம்மவர் மத்தியிலே நிலவும் ஒற்றுமையின்மையே காரணம் என்பதை நாம் அறிவோம். ஒற்றுமையின்மையால் சமாதானத்தை இழந்து நாம் துன்பப்படுவது ஒரு நிகழ்ச்சியாக இருந்த காலம் மாறி அது ஒரு சரித்திரமாக உருவெடுப்பதை நாம் காண்கிறோம்.

''உன்னைத் திருத்து, உலகம் திருந்தும்'' என்பார்கள். எனவே இன்றைய நிலைக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள் என்பதை உணர்வோம். நான் இதற்கு என்ன செய்யலாம் என்று நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயல்படவேண்டும். 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன' என்ற மனப்பான்மையை மாற்றி, எமது சமுதாய வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு நாம் ஒவ்வொருவரும் காரண கர்த்தாக்கள் என்பதை ஏற்றுக்கொள்வோம். இது தான் எமது சமுதாயம் எதிர்நோக்கும் இன்றைய சவால்.

இதை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமா?

**கிங்ஸ்லி றொபட்**




**உங்களுக்கென நீதியை விதையுங்கள், அன்பை அறுவடை செய்யுங்கள்.**

ஓசே 10 / 12



# யேசுவைத் துதிப்போம்

அருட்கவிஞர் திமிலைக்கண்ணன்

இன்னு செய்வோற்கும் இனியவை செய்பவர்
யேசுவென அறிவோம்- நிதம்
தன்னைப் பகைத்து வருத்தும் கொடியவர்
தம்மையும் நேசித்தவர் - அறியாச்
சின்னக் குணத்தர் சினத்தினைக்கண்டு,
சிரிப்பவர் யேசுவென்போம், - தனக்
கென்ன துயரம் வரினும் சகிக்கும்,
இறைவனே யேசு வென்போம்.

உண்மை உணர்த்த உலகினில் தோன்றிய
உத்தமர் யேசுவென்போம் - இந்த
மண்ணில் தருமம் தழைக்க உதித்த
மகிபனே யேசு வென்போம், - அன்று
எண்ணி லடங்காத் துயரம் செய்தோர்க்கு
இரங்கினர் யேசுவென்போம் - உன்
கண்ணே சரீரத் தொளிவிளக்கென்று,
காட்டினர் யேசுவென்போம்.

உள்ளத்தை உள்ளவா றுரையுங்களென்று
உரைத்தவர் யேசுவன்றே? - மனக்
கள்ளத்தை யெல்லாம் அகற்றிநல் தூய
மனம்பெற நாம் முயல்வோம் - நம்
உள்ளத்தில் ஞானஒளிவிளக்கேற்றி
உண்மை உரைத்துயர்வோம் - யேசு
மெள்ள மெள்ளநம துள்ளம் திருத்தி,
மேன்மை நமக்களிப்பார்

கேட்டாற் கிடைக்கு மென யேசுகூறினர்
கேளுங்கள் நல்லவற்றை - கதவு
பூட்டி யிருந்தால் கையினல் தட்டப்
பூட்டைத் திறப்பரென்றர் - மன
வீட்டுள் இருளை யகற்ற முயல்வோம்,
வீம்பு செய்யாதிருப்போம் - இந்த
நாட்டில் அறம்தழைத் தோங்க என்றென்றும்
நாம் யேசுவைத் துதிப்போம்.

# வறுமை ஒழிப்பு (ஜனசவிய) ஒரு நோக்கு

★ அழகு. குணசீலன்,

(பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம்)

உலகின் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைத் தெளிவாக அடையாளம் காட்டி நிற்கும் அம்சம் அந்நாடுகளின் வறுமை நிலையாகும். வறுமை என்பது - போஷாக்கின்மை, பட்டினி, உணவுப் பற்றுக்குறை போன்ற விடயங்களையும் உள்வாங்கிக் கொண்ட ஒன்றாகவே கருதப்படுகிறது. இந்த நிலைக்கான அடிப்படைக் காரணம் வளங்கள் சமமாகப் பங்கிடப்படாமையே என்பது உலகறிந்த உண்மையாகும். எனினும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்குச் சரியான, பொருத்தமான நீண்டகாலத் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதும் உண்மை. இது இலங்கைக்கும் பொருத்தமான ஒன்றே.



எனினும், காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த, முதலாளித்துவத் திட்டமிடல் பணியில் பழக்கப்பட்ட பெரும்பாலான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் - இலங்கை உட்பட வளங்கள் சமமாகப் பங்கிடப்படுவதை நிராகரித்து குறுக்குவழியில் வறியமக்களுக்கு நிவாரணமளிப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்தன. இந்த வகையில் இதுவரையில் இலங்கையில் இத்திட்டங்கள் குறிப்பிடக் கூடியவை.

1. 1943இல் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்ட அரிசிப் பங்கீட்டுப் புத்தகத் திட்டம்.
2. 1978 இல் மாற்றியமைக்கப் பட்ட வறியோர் நிவாரணத் (உணவு முத்திரை) திட்டம்.
3. 1989 - தீர்மானிக்கப்பட்டுள்ள வறுமை ஒழிப்புத்திட்டம்.

இத்திட்டங்களில் 1943ம் ஆண்டுத் திட்டத்தில் ஒரு சிறு மாற்றம் செய்யப்பட்டது. வருமானவரி செலுத்துபவரிடம் இருந்து கூப்பன்களை மீளப் பெறல். இது கலாநிதி என். எம். பெரேரா நிதியமைச்சராக இருந்தகாலத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் செய்யப்பட்டது. 1978 இல் கொண்டு வரப்பட்ட உணவு முத்திரைத் திட்டத்திலும் 1982 இல் சிறுமாற்றம் செய்யப்பட்டது. உணவு முத்திரை பெறுவதற்கான வருமான எல்லையை 300ரூபாவில் இருந்து 700 ரூபாவாக உயர்த்தியதே இதுவாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நிவாரணம் என்ற நிலையினைத் தாண்டி வறுமையினை ஒழிக்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டம் என்ற வகையில் வறுமை ஒழிப்புத் திட்டம் தேசிய ரீதியில் பெரும் முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது.

...வறுமையை அளப்பதற்கு இப்பொழுது போஷாக்கு மட்டுமே அளவு கோலாகப் பயன் படுத்தப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எத்தனை கலோரி உணவை உண்கிறான் என் பதைக் கொண்டு இது அளவிடப்படுகிறது. ஆளொருவர் நாளொன்றுக்கு 2,200 கலோரி உணவையாவது குறைந்தது உட் கொள்ளல் வேண்டும். இலங்கையில் வாழும் சுமார் ஒரு கோடி அறுபது இலட்சம் மக்களில் 30 சத வீதத்தினர் இந்த அளவுக்குக் குறைந்த உண வையே உட்கொள்கின்றனர். இவர்களில் சிலர் 1800 கலோரி உணவையே தினமும் உட்கொள் கின்றனர். கிராமங்களில் 50 வீதத்தினரும், நகரங்களில் 30 வீதத்தினரும் வறுமைக் கோட் டின் கீழ் வாழ்கின்றனர், இந்த விபரங்கள் இத்திட்டத்தின் தேசிய முக்கியத்துவத்தினை எமக்கு உணர்த்துகின்றன.

பொதுவாக இலங்கையின் வறுமைக்கு பின்வரும் காரணங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன.

- உற்பத்தித்திறன் குறைவு
- குறைந்தளவான வருமானம்
- வேலையின்மை
- நிலமின்மையும் பற்றுக்குறையும்
- சாதிப்பாகுபாடு

இந்த அடிப்படை அம்சங்களுடன் இணைந்த வகையிலேயே ஜனசவியத்திட்டம் நடை முறைப் படுத்தப் படவுள்ளது. இத்திட்டம் வெறுமனே பணரீதியான நிவாரணத்தை வழங் குவதையோ அல்லது இதுவரை நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்கள் போன்று முற்று முழுதாக நுகர்வு சார்ந்த ஒரு திட்டமாகவோ அமையவில்லை. இத்திட்டத்தின் கீழ் அடையா ளம் காணப்பட்ட குடும்பமொன்றுக்கு மாதாந் தம் 2500 ரூபா வழங்கப்படும். இதில் 1458 ரூபா நுகர்வுக்குச் செலவு செய்யவும், 1042 ரூபா சேமிக்கவும் வழங்கப்படுகிறது. நுகர்வுக் கான 1458 ரூபாவில் 1000 ரூபா உணவு, உடை, பால்மா, பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றிற்காக வழங்கப்படுகிறது. இப் பெறுமதிக்கு வழங்கப்படும் உறுதிப்படுத்தப் பட்ட பத்திரத்தினைக் கொண்டு கூட்டுறவுக் கடையில் அல்லது உத்தரவு பெற்ற வியாபாரி களிடம் இவற்றைப் பெறலாம். மிகுதி458ரூபா வினை சேமிக்கவோ அல்லது விருப்பப்படி செலவு செய்யவோ முடியும். ஆனால் 300 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறுபவர்களே இத் தொகை (458ரூபா) முழுவதையும் செலவிட அனுமதிக்கப்படுவர். இதை விடவும் கூடிய வருமானம் பெறுபவர்களுக்கு இதிலும் குறிப் பிட்ட ஒரு தொகையை சேமிக்க வற்புறுத்தப் படும். வருமானம் அதிகரிக்க அதிகரிக்க இச் சேமிப்பும் அதிகரிக்கும்.

> முயற்சி செய்தால் வெற்றி கிடைகும் என்பதைவிட முயற்சி செய் வதால் நம்முடைய தகுதியை வளர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறதே. அதற்காகவாவது முயற்சி செய்து பார்க்க வேண் டாமா?
>
> அல்பர்ட் ஐன்ஸ்டீன்

இவற்றினோடு மாத்திரம் இல்லாமல் வேலை வாய்ப்பு, வீட்டுவசதி, காணி என்பவற்றை வழங்குவதையும், முதலீட்டு முயற்சிகளை ஊக் குவிப்பதையும் இத்திட்டம் தன்னுடன் இணைத் துக் கொண்டுள்ளது. முகவர் வங்கி, கிராமிய வேலைத்திட்டம், இளைஞர் பயிற்சித் திட்டங் கள், சிறிய நடுத்தரக் கைத்தொழில், கைத் தறி நெசவு, ஆரம்ப சுகாதார வசதிகள் என் பனவும் ஏற்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்பட வுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு, திரிபோஷா விநியோகம், போன்றவற் றையும் கூட இத்திட்டத்தில் இருந்து பிரித்து நோக்க முடியாது.

இத் திட்டத்தின் நடைமுறை பற்றி நோக்கும் போது இத்திட்டம்தொடர்பாக ஜனதிபதி அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது ''எங்களுடைய மக்கள் தொகையில் அரைவாசிப் பேர்கள் உணவு முத்திரை மூலமாக வாழுகின்ருர்கள். அந்த மக்களை எப்படியாவது அந்த நிலையிலிருந்து நாங்கள் மீட்கவேண்டும் ஏழ்மையிலிருந்து அவர்களை மீட்க வேண்டும். எங்களுடைய நாடு செல்வமான நாடு. மக்களில் சரி பாதியினர் ஏழ்மையிலே தவித்தாலும் எங்களுடைய நாடு நல்ல செல்வ நாடாக, வளமான நாடாக, இயற்கை வளங்கள் உள்ள நாடாக மிளிர்கின்றது. இந்த நாட்டை ஐரோப்பாகவோ, அமெரிக்காவாகவோ, ஆபிரிக்காவாகவோ ஆக்குவதற்கு எமக்குத் தேவையில்லை. நாங்கள் ஒரு ஆசிய நாடாக ஆக்குவோம்''

இதன் மூலம் இத்திட்டம் மேற்கில் இருந்து இறக்குமதி செய்யப்படவில்லை என்பது புலனுகின்றது. கிராமிய மட்டத்தில் உள்ளூர் சுதேசிய நிர்வாகப் பாணியிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நாடு முழுவதும் இத்திட்டத்திற்காக 30,000-குக் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சாதாரண மக்களுக்குப் பெரும் பளுவினை ஏற்படுத்தாத வகையில், பெருமளவுக்குப் பொதுத் துறையில் ஏற்படும் வீணன செலவுகளையும், விரயங்களையும் கட்டுப்படுத்துவதன் மூலம் இதற்கான நிதியினைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் ஏப்பிரல் முதலான ஒன்பது மாதங்களில் இத்திட்டத்திற்குப் பயன்படுத்துவதற்கென 10,000 மில்லியன் ரூபா இந்த வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினர் சிறிதும் பொறுப்பற்ற வகையில் இத்திட்டம் பற்றிக் கூறுகின்ற குற்றச்சாட்டுக்களை நாம் முற்று முழுதாக ஏற்கா விட்டாலும், நடைமுறையில் இத்திட்டத்திஞல் ஏற்படக்கூடிய சில பாதிப்புக்கள் குறித்து கவலைப்படாமலும் இருக்க முடியாது.

★ அரசாங்கத்தினுல் வழங்கப்படும் நிவாரணப் பணங்கள் கடந்த காலங்களில் எமது மக்களால் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. இதிலும் அவ்வாறன குறைபா[டு]களுக்கு இடமில்லை எனக் கூறமுடியாது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் சேமிக்கப்பட்ட 25.000 ரூபாவும் சரியாக முதலீடு செய்யப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

★ கிராமிய மட்டத்திலான குழுவில் கிராம சேவகர்கள் இடம் பெறுகின்றனர். உண்மையில் குழுவின் மற்றைய பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு இவர் கட்டுப்பட்டவராகவே இருக்க வேண்டும் ஆனுல் நடைமுறையில் கிராமசேவகர் குழுவைக் கட்டுப்படுத்துவதையும், தன்னிஷ்டப்படி வழி நடத்துவதையும் காணமுடிகிறது. எனவே குழுவின் தீர்மானங்கள் சரியானவையாக, சுதந்திரமானவையாக இருக்கும் எனக் கொள்ள முடியாது.

★ மாதாந்தம் பெருந்தொகைப் பணம் புழக்கத்திற்கு வழங்கப்படுவதால் - நாட்டின் பணப்புழக்கம் அதிகரித்து பணவீக்கம் ஏற்படும். இத்திட்டத்திற்கான நிதியினைப் பெறவரிவிதிப்பதாலும், விலைவாசியினை உயர்த்துவதனுலும், வரவு - செலவுத்திட்டத்தில் அதிக பணம் வறுமை ஒழிப்புக்குச் செலவிடப்படுவதனுல் ஏற்படும் பற்றுக் குறைக்குக் கடன் படுவதனுலும் பணவீக்கம் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புண்டு.

★ இரண்டு வருடங்களில் பெறப்படும் 25,000ரூபா சேமிப்புத் தொகை - பணவீக்க சூழ்நிலையில் பெறுமதி வீழ்ச்சியடைந்து விடும். இந்த நிலையில் குறிப்பிட்ட ஒரு முதலீட்டிற்கு இத் தொகை போதுமானதாக இருக்கும் எனக் கொள்ள முடியாது.

★ இரண்டு வருடங்களின் பின் மாதாந்த பணக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டு விடும் சேமிப்பும் சரியாகப் பயன்படுத்தப்படாவிட்டால் இன்றைய நிலைமையை விடவும் இவர்கள் வறுமையால் அதிகம் பாதிக்கப்படவேண்டியிருக்கும்.

★ அரசாங்க, ஊழியர்களும் தமது குறைந்த பட்ச மாதசம்பளத்தை 2500 ரூபாவாக உயர்த்துமாறு கேட்கலாம், ஓய்வூதியம் பெறுபவர்களும் இதே கோரிக்கையினை முன் வைக்கலாம், இதனால் வேலைநிறுத் தங்கள் போன்றவை ஏற்படுவதற்கும் இடமுண்டு.

★ இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அதிக பணம் தேவை இதற்காக அரசாங்கம் வெளிநாடுகளில் தங்கியிருக்கவேண்டி வரலாம்.

எவ்வாறாயினும் சில அடிப்படையான நல்ல நோக்கங்களை இத்திட்டம் கருத்தில் கொண்டுள்ளது என்பதில் கருத்து வேறுபாடு கள் இருக்க முடியாது, எனினும் இது பற்றிய ஒரு சரியான மதிப்பீட்டினை இப்பொழுது செய்ய முடியாது. நன்மைகள், தீமைகள் என்று இன்று சொல்லப்படுபவை வெறும் எதிர்பார்ப்புகளே. திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு முடிந்தபின்னரே சரியான ஒரு நோக்கினைச் செய்ய முடியும். எது எப்படியிருப் பினும் "ஒருவருக்கு மீனொன்றை வழங்குவதை விட அந்த மீனைப் பிடிக்கும் முறையைக் கற்றுக் கொடுப்பது மேலானது" என்ற சீனப் பழ மொழியை இங்கு நினைவூட்டுவதன் மூலம் அரசாங்கம், முதலீடு சரியான துறையில் இடம் பெறுவதை கண்காணிக்கவும் வேண்டும்.

---

**திருமண வாழ்க்கையை மிகவும் இன்ப மாகவும், புனிதமாகவும் உருவாக்குவது ஒன்றே ஒன்றுதான். அது, தம்பதி இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண் டிருக்கும் உண்மையான காதலாகும்.**

**ரஷ்யப் பழமொழி**

---


**சிறுகதை எழுதும் வழிபற்றி பிரபல எழுத்தாளர் சுஜாதா சில வரிகளில் கூறுகிறார்......**

- பார்த்த, அனுபவித்த சம்பவத்தை எழுதுங்கள்.
- சிறுகதையை அந்தரத்தில் தொங்க விடாதீர்கள். ஏதாவது ஒரு ஸ்தலம் வேண்டும் அதற்கு. சென்னை - 21. நெல் லூர், பம்பாய்... ஏதாவது...
- பம்பாயைப் பார்க்காமல் பம்பாயைப் பற்றி எழுதாதீர்கள்.
- Single incident please! ஒற்றைச் சம்பவம் போதும்.
- ஒரு பாத்திரத்தின் கோணத்திலிருந்து கதை சொல்லுங்கள். நடுவழியில் கதா நாயகன் – நாயகியை மறவாதீர்.
- எழுதிய கதையை ஒருவாரம் விட்டு மறுபடி படித்துப் பாருங்கள். ஓட்டை கள் புலப்படும்.
- Rewrite, Rewrite! ஒவ்வொரு முறை திரும்ப எழுதும்போதும் கதை அந்த அளவுக்குத் தீட்டப்பட்டுப் பிரகாச மாகும்.
- தமிழ் நிறையப் படியுங்கள். சங்கப் பாடல்கள், ஏல நோட்டீஸ், ராத்திரி ரவுண்ட்- அப், ஜானகிராமன், புதிய ஏற் பாடு ....... எல்லாம் படியுங்கள்!
- குறுக்கு வழியே கிடையாது. நிறைய நிறைய எழுதினால்தான் பழகும்.

**தொகுப்பு: FR. நோயல் இம்மானுவல்**

**நன்றி - ஜூனியர் விகடன்**

சென்ற இதழ் தொடர்ச்சி...



## மாணவர் பக்கம்

# அப்போஸ்தலர் பணி XI

(க. பொ. த உயர்தரம்)

### திருச்சங்கத்தின் தீர்மானங்கள்

எனவே எருசலேம் திருச்சங்கம் பின்வரும் தீர்மானங்களை எடுத்தது.

1. யூதர்களும், புற இனத்தவர்களும் கிறிஸ்தவ நெறியில் சமமானவர்கள்.
2. சிலைவழிபாடும், தவறான நடத்தைகளும் தவிர்க்கப்பட வேண்டும்.
3. சிலைகளுக்குப் படைக்கப்பட்டது, மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி, மிருகங்களின் இரத்தம் (யூதர்கள் இரத்தம் உயிரின் உறைவிடம் எனக் கருதினர்) என்பவற்றை உண்ணக் கூடாது.

இத்தீர்மானங்கள் அனைவரையும் திருப்திப் படுத்தக் கூடியதாக அமைந்ததால் சங்கத்தினர் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். உடனே அது அமுலாக்கப்படுகின்றது. சங்கத்தின் தீர்மானம் அடங்கிய கடிதம் ஒன்றுடன் தங்களின் பிரதிநிதிகளாக யூதாஸ், சீலா என்பவர்களை அப்போஸ்தலர்கள் தேர்ந்தெடுத்து சின்னப்பரோடும் பர்னபாவோடும் அனுப்புகின்றனர். சங்கத்தின் தீர்மானத்தை அறிந்த அந்தியோக்கு திருச்சபை பெரிதும் மகிழ்ந்தது.

### திருச்சங்கத்தின் பலாபலன்கள்

எருசலேம் பொதுச் சங்கத்தோடு யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும் இடையே நிலவிய வேறுபாடுகள் முற்றாக மறைந்தன என்று கருதுவது தவறானது. பல யூதக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்தும் புறவினத்தாரோடு சேர மறுத்திருப்பர். தாங்கள் தனித்து வழிபாடுகளை நடத்த விரும்பியிருப்பர். பல ஆண்டுகளாக நிலவி வந்த வேறுபாட்டுணர்ச்சி ஒரு பொதுச் சங்கத்துடன் மறைந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் புற இனக் கிறிஸ்தவர்களின் விடுதலைக்கு அது ஒரு வெற்றியாகக் கருதப்பட்டது. திருச்சபை பிளவு படவில்லை, எருசலேம் திருச்சங்கம் ஒரு சிறந்த படிப்பினையை நமக்குத் தருகின்றது. மீட்படைய மோயிசனின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் அவசியம் என நம்பி வந்த யூதக் கிறிஸ்தவர்களின் கண்மூடிப் பழக்கவழக்கங்களைத் தகர்த்தெறிகிறது. கிறிஸ்துவே எல்லாக் கட்டளைகளுக்கும் முதலும் முடிவுமானவர். மதக் கோட்பாடுகள், திருச்சபையின் ஒழுங்கு முறைகள், திருவழிபாட்டு நெறி முறைகள் அனைத்தும் கிறிஸ்துவை மையமாக வைத்தே இயங்க வேண்டும். இன்று கிறிஸ்து நமக்கு அளிக்கின்ற புதிய கட்டளை 'அன்புக் கட்டளை' மற்ற அனைத்துக் கோட்பாடுகளும் நீதி நெறிகளும் இதனைச் சுற்றியே சுழல்கின்றன.

### நண்பர் பிரிவு

ஒரு வருடத்தில் மீண்டும் பயணம் செய்ய சின்னப்பர் ஆவலாயிருந்தார். பர்னபாவும் அவருடன் செல்ல விரும்பினர். தன் மருமகன் மாற்கு அருளப்பரையும் அழைத்துச் செல்ல எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் சின்னப்பர் அதற்கு இடமளிக்கவில்லை. மாற்கு அருளப்பர் முதல் பயணத்தில் நடுவழியில் பிரிந்து சென்றதனால் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்க விரும்பவில்லை. பர்னபா சின்னப்பரைவிட வயது முதிர்ந்தவராக இருந்ததால் மாற்கு அருளப்பரின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்து அவருக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் கொடுக்க விரும்பினர். ஆனால் சின்னப்பர் அதற்குச் சம்மதிக்கவில்லை. இருவரும் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டு வாதாடிய

தால், நண்பர் இருவர் பிரிய வேண்டிய கட்டம் வந்தது.

அதன் பிறகு பர்னபாவுக்கு என்ன நடந்தது என்று வேறு எங்குமே கூறப்படவில்லை. ஆயினும் பூர்வீகக் கதையொன்றின்படி பர்னபா தன் சொந்த ஊரான சைப்ரசுக்குச் சென்று அங்கு நற்செய்தியைப் போதித்தார் எனவும், பின்னர் தன் சொந்த நாட்டிலேயே வேதசாட்சியாக மரித்தார் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் மாற்கு அருளப்பர் ஆரம்பத்தில் தோல்வியைக் கொண்டாலும் இறுதியில் வெற்றியடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. (காண் / கொலோ 4 / 10; பிளப்பியர் 5 / 24; 2 தீமோத் 4 /11; 1 இராயப்பர் 5 / , 3) இயேசுவின் நற்செய்தியினை முதன் முதல் எழுதும் பொறுப்பினை அவரிடமே திருச்சபை கொடுத்து அவரைக் கௌரவிக்கின்றது.

## இரண்டாம் பயணம்

சின்னப்பர் தன் இரண்டாம் பயணத்துக்கு சீலாவைத் துணையாகத் தேர்ந்து கொண்டார். எருசலேம் சங்கத்தினல் அந்தியோக்கியாவிற்கு அனுப்பப்பட்ட சீலா அங்கேயே தங்கியிருந்தார். இருவரும் தரை மார்க்கமாக சீரியா, சிலிசியா மலைகளினூடாகச் சென்று லிஸ்திராவை அடைந்தனர். சின்னப்பர் அங்கு செல்வதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. தான் தாபித்த சபையினைத் தரிசிப்பதுஒன்று. அங்கு வாழ்ந்த தீமோத்தேயுவையும் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டுமென்பது மற்றொன்று.

## விவேகமான செயல்

தீமோத்தேயுவின் தாய் யூத குலத்தைச் சேர்ந்தவர். தந்தை கிரேக்க இனம். தீமோத்தேயு கிறிஸ்தவ மறையைத் தழுவியிருந்தார். சின்னப்பர் அவரை முழு யூதனுக்க விரும்பி விருத்த சேதனம் செய்வித்தார். எருசலேம் சங்கம் புறவினத்தார் விருத்த சேதனம் செய்யாமலே திருச்சபையின் அங்கத்தவராக இருக்கலாம் என முடிவெடுத்திருந்தும் சின்னப்பரின் இச்செய்கை முரண்பாடான தொன்ருகத் தெரியலாம் இல்லவே இல்லை. சின்னப்பர் ஒரு செயல் வீரர் தான் செபக்கூடங்களைத் தரிசிக்க வேண்டுமென்பதையும், தீமோத்தேயுவின் பொருட்டு வீணன விவாதங்கள் எழக்கூடாது என்றும் நினைத்தார். அத்தகைய விவாதங்கள் நேரத்தை வீணுக்கும். எவ்வாருயிருப்பினும் தீமோத்தேயு விருத்தசேதனம் செய்யப்படாமல் இருந்தால், செபக்கூடங்களில் அனுமதிக்கப்பட மாட்டார். முழு யூதனுக அவர் மாறினல் அனைத்தும் சுலபமாக முடியும் என்பதை உணர்ந்த சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்வித்தார்

## விஞக்கள்

1. எருசலேம் திருச்சங்கம் ஏன் முக்கியமானதாக இருந்தது?
2. எருசலேம் திருச்சங்கத்தில் உரையாற்றியவர்கள் யார்? அவர்கள் ஒவ்வொருவரும் வலியுறுத்திய கருத்துக்கள் எவை?
3. எருசலேம் திருச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எவை?
4. எருசலேம் திருச்சங்கத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் படிப்பினை என்ன?
5. சின்னப்பருக்கும் பர்னபாவுக்கும் பிரிவு ஏற்படக் காரணமாய் அமைந்தது எது?
6. நமது மீட்புக்கு விருத்தசேதனம் அவசியமில்லை என்ற கொள்கையுடைய சின்னப்பர், தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்வித்ததேன்?
7. அப்போஸ்தலர் பணியில் பர்னபா, சீலா, மாற்கு அருளப்பர், தீமோத்தேயு என்பவர்களைப் பற்றிய குறிப்புரைகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக?

> உயிர் உள்ள வரையில் உழைத்துச்சாக விரும்புகிறேன். உழைக்க உழைக்கத் தான் எனக்கு உயிர் வாழ்வு இனிக்கிறது.
>
> - பெர்னுட்ஷா

## மரியாயின் சேனை மட்/ மறை மாநில கியூறியா சபையின் புதிய அலுவலர்கள்

1. ஆன்மீக இயக்குநர்: அருட்திரு T. ஞகல் அடிகள்
 தலைவர் - சகோ F. கபிரியல் அவர்கள்
 துணைத் தலைவர் - சகோ K. செல்வராசா அவர்கள்
 செயலாளர் - சகோ A. ஞானசூரியம் அவர்கள்
 பொருளாளர்:- சகோ J. S. பிள்ளை அவர்கள்
 ஆன்மீக இயக்குநர் தவிர்ந்த இவர்களின் பதவிக்காலம் 1989 முதல் 1992 வரையிலான மூன்று வருடகால எல்லையாகும்.

2. மட்/ மறை மாநில மரியாயின் சேனையினர்க்கான 1989ம் ஆண்டின் ,"ஆஸியஸ்" விழா கடந்த சித்திரை 01ம்நாள் சனிக்கிழமை அன்று மாலை 3.30மணிக்கு புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் கியூறியா சபை சார்பாக இடம் பெற்றது. மறை மாநில பல்வேறு பங்குகளிலுமிருந்து மரியாயின் சேனை ஊழிய, உதவி அங்கத்தினர்கள் பங்குபற்றி தங்களை அன்னையின் பணிக்கு ஒப்புவித்துத் தங்களை அற்பணித்தனர்.

3. மட்/ மறை மாநில கியூறியா சபை சார்பாக மரியாயின் சேனை ஊழிய உதவி அங்கத்தினர் அனைவருக்குமான ஒரு நாள் 'தியானம்' கடந்த 13-04-89 வியாழன் அன்று காலை 8 30 மணியிலிருந்து, மாலை 3.30 மணிவரை மட்/இருதயபுரப் பங்கு புனித வனத்து அந்தோனியார் ஆலய சேத்திரத்தில் சபையின புதிய ஆன்ம இயக்குநர் அருட்திரு T. ஞகல் அடிகள் தலைமையிலும் மேற்பார்வை ஒழுங்குகளிலும் இடம்பெற்றது. 125 சேனை அங்கத்தினர்கள் பங்குபற்றினர். இவர்கள் அக்கரைப்பற்றில் இருந்து வாழைச்சேனை வரையிலான பங்குத் தளங்களின் சேனை உறுப்பினர்கள்.

## இல்லறத்தூதுவர் போதகர் K. இயேசுராசா அவர்களின் பணியின் 25வது வெள்ளி விழாக் கொண்டாட்டம்

இல்லறத்தூதுவராக 27 - 05 -1965ம் ஆண்டு பணிக்கென நியமனம் பெற்ற திரு: K. இயேசுராசா அவர்கள், திருமலை-மட்டுநகர் மறை மாவட்டத்திலே 25, ஆண்டுகள் (27 - 5 - 1989) பணியாற்றிய வெள்ளி விழா நிகழ்ச்சி 12 - 6 89ல் கொண்டாடப்பட்டது. தாண்டவன்வெளி - பரி. வியாகுல அன்னை ஆலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு, ஆயர் L. R. அன்ரனி, குருமுதல்வர் J. டிக்கோணிங் அடிகள், மறைமாநில மறைக் கல்வி இயக்குனர் A. தேவதாசன் அடிகள், மற்றும் மறைமாவட்டக் குருக்கள், பொது நிலையினர், வெள்ளிவிழா நாயசன் - இல்லறத் தூதுவர் புடைசூழ, நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலி முடிவில், வெள்ளிவிழா நாயகன் திரு K. இயேசுராசா அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ச்சியும், ஆலய வெளி அலங்கார மேடையில் நடைபெற்றன, 25வருட ஞாபக சின்னமாக ''மலர்'' ஒன்றும் வெளியிடப்பட்டது. ஆயர், குருக்கள், பொதுநிலையினர் பலர் இல்லறத்தூதுவரின் பணிகள் பற்றி சிறப்புரையாற்றினுர்கள். முன்னைநாள் மறைக் கல்வி இயக்குநர் அருட் திரு D, சாமிநாதனும் இன்றைய இயக்குநர் A தேவதாசன் அடிகளாரும், போதகர் K. இயேசுராசாவைப் பற்றியும் அவரது குணநலன்கள் பற்றியும், புகழாரம் சூட்டினர். இன்று திருச்சபையில், பொது நிலையினர் பணிக்கு இவரது சேவை சிறந்த எடுத்துக்காட்டு என்றும், திருமலை மட்டுநகர் மறை மாவட்டத் திருச்சபை பெரு மகிழ்ச்சியடைகிறது என்றும்,இவரைப் போன்றசேவை மனப்பான்மை கொண்ட பலர் இன்று பொது நிலையினரிடையே தோன்ற வேண்டும் என்று இயக்குநர் A. தேவதாசன் அடிகளார் கேட்டுக் கொண்டார். வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் அனைத்தையும் வெள்ளிவிழாக் குழுவினர் சார்பில் இல்லறத்தூதுவர் A. J. ஞானப்பிரகாசம் அவர்கள் ஒழுங்கு படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தகவல்: A. J. ஞானம்**
மறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம்
மட்டுநகர்.

# ஏற்பு



## இளைஞர் அரங்கம்

ஒரு நாட்டின் பொருளாதாரம் விருத்தியடைய, சர்வ தேச உறவுகள் வலுவடைய ,புதிய மாடிக் கட்டிடங்கள், அணைக்கட்டுக்கள், நீர் மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், தொடர்புச் சாதன நிலையங்கள் என்பன அந்நாட்டில் உருவாக்கப்படுகின்றன.

போக்குவரத்துச் சாதனங்கள் அதிகரிக்கின்றன. பெருஞ் சாலைகள் அமைக்கப்படுகின்றன. உலகச் செய்திகள் யாவும் எம் வீட்டிற்கே வந்து விடுகின்றன. வசதிகள் பெருகுகின் றன. மனித வாழ்க்கையின் வேகம் கூடுகின்றது.

மக்களை வழிநடத்த, முன்னெடுத்துச் செல்ல அமைப் புக்கள், இயக்கங்கள், நிறுவனங்கள், சபைகள் தோற்றம் பெறுகின்றன. விரிவடைகின்றன.

ஆனல் மக்கள் மறுக்கப்படுகின்றனர். மனிதர்கள் மாக்களாக மதிக்கப்படுகின்ருர்கள்.

அமைப்புக்களுக்கும், இயக்கங்களுக்கும், மக்கள் மக்களாகத் தெரிவதில்லை. மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்படவை கள் அம்மக்களையே அமுக்கி விடுகின்றன. விழுங்கி விடுகின்றன. அழித்தும் விடுகின்றன.

அமைப்புக்களினதும், பலமாடிக்கட்டிடங் களினதும், உயர் மட்டத்தில் இருப்பவர் களுக்கு இவற்றின் அடியில் நிற்கும் மக்கள் தெரிபடுவதில்லை. உயரச் சென்றதும் மறந்தும் விடுகின்றனர், மறுத்தும் விடுகின்றனர்.

எனவே,

அமைப்புக்களை ஆள்வோர்,

உயர்வுகளைப் பெற்றேர்,

நிறுவனங்களை நிர்வகிப்போர்,

மக்களை மக்களாக ஏற்க முன்வரவேண்டும். மக்களால், மக்களுக்காக உருவாக்கப்பட்டவை, அம்மக்களையே அளிக்க முற்படும்போது, எதிர்த்து அம்மக்களைப் பாதுகாக்க, பரா மரிக்க, முன் வர வேண்டும் என அன்புக் குரல் கொடுப்பது.-

—கலையுலகன்

### அனைத்துலக எழுத்தறிவு ஆண்டு

1990 ம் ஆண்டு அனைத்துலக எழுத்தறிவு ஆண்டு என ஐக்கிய நாடு கள் சபை பிரகடனம் செய்துள்ளது. உலகில் 88.9 மில்லியன் மக்கள் எழுத் தறிவு இல்லாதவர்கள். இது உலக மக்கட் தொகையில் 27.7 விழுக்காடு ஆகும். இவர்களில் 98 விழுக்காடு மக் கள் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

# அச்சுத்துறையும் எமது (பிர)தேச வெளியீடுகளும்

எஸ். லோகநாதன்

உலக நாடுகளது, குறிப்பாக தென்கிழக்காசிய அச்சுத்துறையுடனும், இந்திய வெளியீடுகளுடனும், எமது தேசிய, சிறப்பாக தமிழ் மொழியிலான பிரசுரங்களையிட்டு, ஒரு கண்ணோட்டத்தை இங்கு தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அச்சுத்துறை எவ்வளவு உயரிய வளர்ச்சி கண்டும், எமது பிரதேச வெளியீடுகள் ஏன் ஓர் உயரிய வளர்ச்சிப் போக்கை அடையவில்லை என்பதையும் இக்கட்டுரை கூறும் என நான் கருதுகிறேன்.

## அச்சுத்துறை (Press Media)

உலகில் வளர்ச்சி பெற்றுள்ள வெகு ஜனத் தொடர்புச் சாதனத் துறைகளில் ஒன்றான அச்சுத்துறையும் இன்று உச்ச நிலையிலான விளைவுகளை வழங்கி வருகின்றது. 1440களில் அச்சிடல் (Print) முறை உலகில் அறிமுகமானாலும், 17ஆம் நூற்றாண்டுக்குப்பின்தான் அச்சுத்துறை புதிய அணுகுமுறைகளையும் நவீன இயந்திர சாதனங்களையும் தம்முடன் இணைத்து ஒரு தனிப் பெரும் துறையாக வளரத் தொடங்கியது என வரலாறுகள் கூறி நிற்கின்றன. இன்று தொலை அச்சு (Tele - Print) வரையிலான வளர்ச்சியை இத்துறை கண்டுள்ளது.

1980 களில், "UNESCO" மேற்கொண்ட மதிப்பீட்டின்படி உலகில் 400000த்திற்கும் மேற்பட்ட பத்திரிகைகள் அச்சிடப்படுகின்றன எனவும் 5000 மில்லியன் பிரதிகள் தினமும் வெளியிடப்படுகின்றன எனவும் கூறப்படுகிறது.

ஒரு நிமிடத்திற்கு 1200 வார்த்தைகளை பதிப்பிக்கக்கூடிய நவீன இயந்திர சாதனங்களும் இன்று பாவனைக்கு உருவாக்கப்பட்டுள்ளன.

உலகிலேயே ஐக்கிய அமெரிக்காதான் அதிகளவு அச்சுத்துறை வசதியை உயரிய மட்டத்தில் பயன்படுத்துகிறது எனவும் கூறப்படுகிறது. ஆசிய நாடுகளில், வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் அடிப்படையில் 10%மான அளவே அச்சுத்துறையைச் சார்ந்த வெளியீடுகளாக அமைகின்றன. அதிலும் உள்ளூர் பத்திரிகைகள் 75%மானவை (செய்திகளை - கட்டுரைகளை) வெளி நாட்டுக்குரிய தகவல்களையே தருகின்றன.

இன்று ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஐக்கியராச்சியம், சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளே பெரும் அச்சுத்துறை கொண்ட தபால்களை உள்ளடக்கிய நாடுகளாக திகழ்கின்றன.

## உலக வெளியீடுகள்:-

இன்று உலகிலே வெளிவரும் அச்சுத்துறை சார்ந்த வெளியீடுகளை நாம் பருமட்டாக நோக்கும் போது அவற்றை பின்வரும் ஒழுங்கில் அடக்கி விடலாம்.

1. நாளாந்த செய்திகளையும் - புதினங்களையும் வெளியிடும் நாளிதழ்கள்.
2. வாராந்த செய்திகளைத் திரட்டித் தரும் பிரசுரங்கள்.
3. குறித்த ஒரு துறையை - சூழலை அவை சார்ந்த தகவல்களை வழங்கும் பிரசுரங்கள் - சஞ்சிகைகள்.
4. மாதாந்த சஞ்சிகைகள்.
5. காலாண்டு, வருடாந்த வெளியீடுகள்.
6. விஞ்ஞான - தொழில் நுட்ப அறிவு சார்ந்த நூல்கள்
7. பாடசாலை, உயர்கல்வி கற்கை நெறிகளுக்கான உதவி நூல்கள்.

8. கலை, இலக்கியம், சமயம் சார்ந்த நூல்கள், ஆய்வு நூல்கள்.

9. ஓய்வு நேர வாசிப்புக்கெனவும், புத்தி புகட்டவும் கருதிய சிறு கதைத் தொகுதிகள், நாவல்கள், கவிதைத் தொகுதிகள்.

10. அனுபவங்களையும், தத்துவங்களையும், காலத்திற்கு காலம் எடுத்துக் கூறும் நூல்கள்.

இத்தகைய வெளியீடுகளை, ஒவ்வொரு நாட்டிலும், அரச, தனியார் அமைப்புக்கள், பொதுத்தாபனங்கள், தனி நபர்கள் வேறுபட்ட மொழிகளில் வெளியிடுகின்றனர்.

## வெளியீட்டின் நோக்கம்:-

அச்சுத்துறையை ஒரு தொழிலாக, இலாபம், நிலையான வருமானம் பெறத்தக்க துறையாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களும் உள்ளன. பல்வேறுபட்ட முயற்சிகளின் மத்தியில் ஒரு பக்க விளைவாகக் கருதி அதிக இலாபம் எதிர் பாராது சேவை நோக்குடன் வெளியிடும் அமைப்புக்களும் உள்ளன.

அச்சுத் துறையுடன் ஈடுபாடு கொண்டு எழுதுபவர்களை நோக்கும் போது நிலையான வருமானத்தைப் பெறுவதற்கென எழுதுபவர்களும், சிறு வருமானத்தை எதிர்பார்த்து எழுதுபவர்களும், எவ்வித வருமானத்தையும் எதிர்பாராது எழுதுபவர்களும் உண்டு. கலை, இலக்கிய வளர்ச்சிக்காக, பண்பாடு மேம்பட, புகழ், (இயல்பூக்க அடிப்படையில்) பெற எழுதுபவர்களும் மேல் வந்த வகுப்பினரில் அடங்கியிருக்கின்றனர்.

வெளியீட்டாளர்களின், எழுதுபவர்களின் நோக்கு மேற்குறிப்பிட்ட பண ரீதியான எதிர்பார்ப்பை மட்டுமல்லாது தாம் சார்ந்த அமைப்பு வளர்ச்சி கருதியும், மக்களுக்கு புத்தி புகட்டவும், சிறந்த, புதிய தகவல்களை, கருத்துக்களை வழங்க வேண்டும் எனும் உயரிய நோக்குடனும் எழுதுகின்றனர் - எழுதினர் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## தேசிய பிரசுரங்களின் வளர்ச்சி:-

எமது நாட்டில், குறிப்பாகத் தமிழ் பத்திரிகைகளின் வளர்ச்சிப் போக்குப் பற்றியே நாம் கவனத்திற் கொள்வோம். தென்னிந்தியாவில் தமிழ் பத்திரிகைத் துறை (அச்சுத் துறை) வளர்ச்சி பெற்ற சூழலிலேயே இலங்கையிலும் கிறிஸ்தவ சமய தாபனத்தாரால் (Christian Missionary) முதல் பத்திரிகை வெளியிடப் பட்டது. 1838ல் ஐக்கிய அமெரிக்க கிறிஸ்தவ குருக்களால் 'ஞான ஒளி' என்ற செய்திப் புத்தகம் முதலில் வெளியிடப்பட்டது. இது திருச்சபையின் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதாகவே அமைந்திருந்தது எனக் கூறப்படுகிறது 1841ல் உதய தாரகை எனும் வெளியீடும் வெளிவரத் தொடங்கியது.

இக்காலத்தைத் தொடர்ந்து ஆறுமுக நாவலரின் சமயப் பணியின் பொருட்டு நாவலர் அச்சுக் கூடத்தை 1869ல் சைவப்பரிபாலன சபை நிறுவியது. இதனால் இந்து சாதனம், இந்து ஆகிய பிரசுரங்கள் வெளிவரத்தொடங்கின. 1879ல் ''Messenger'' உம், அதைத் தொடர்ந்து சத்திய வேத பாதுகாவனும் வெளிவரத் தொடங்கின என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும் அக்காலப் பிரசுரங்கள் சமயப் பணிகளை ஊக்குவிக்கவே கையாளப்பட்டன, எனக் கூறலாம்.1920களில் இலங்கை தின வர்த்தமானி, தேசாபிமானி சன்மார்க்க போதனி, ஆகியனவும் 1930ல் யாழ்நகரிலிருந்து ஈழகேசரியும், 1932ல் மட்டக்களப்பிருந்து ''கிழக்குத் தபாலும்'' வெளிவந்தன.

(தொடரும்)

**மனதைத் தூய்மைப்படுத்தி அதிலேயே உங்களுக்குரிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். மனத்தூய்மையினால் வெகுவிரைவில் இறைவன் உங்களிடம் தான் இருக்கிறான் என்பதை எண்ணம், செயல் ஆகியவற்றின் மூலம் நீங்களே காண்பீர்கள்.**

**ஜேம்ஸ் ஆலன்**



# சந்தனச் சிதறல்கள்

கோகிலா மகேந்திரன்

## 12

வானம் முழுதும் முகில் மூடி மழை ஓயாது அழுது கொண்டிருந்தது. வானும், மலையும், நிலமும், நதியும், மரமும், இலையும், மலரும், சருகும், பனியும், மழையும் எல்லாமே அழுது கொண்டிருப்பது போலவே தோன்றியது மேரிக்கு யாழ்ப்பாணத்து மக்களுக்கும் பொதுவாக வடக்குக் கிழக்கு வாழ் மக்கள் அனைவருக்கும் ஏறத்தாழ அதே நிலைதான்! யார் இறந்தார்கள் யார் இருக்கிறார்கள் யார் கைகால்களைப் பறிகொடுத்து விட்டு ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார்கள். யார் வீடு வாசல்களை முற்றாக இழந்தார்கள். யார் சிறுகச் சிறுகச் சேமித்த உடைமைகள் அனைத்தையும் முற்றாக இழந்தார்கள் ஒன்றும் நிச்சயமாயித் தெரியவில்லை.

குருதியால் நனைந்த சிறகுகளைக் கொண்ட ஈக்களாய் கோயில்களில் மொய்த்துப் போயிருந்த மனிதர்கள் மெதுவாகத் தமது வீடுகளுக்குத் திரும்பிப் போயிக் கொண்டிருந்தார்கள்.

மேரியும் வீட்டிற்கு வந்துவிட்டாள். வீட்டிற்கு முன்னால் மிக நீண்டு போய்க்கிடந்த தெரு வெகு அந்நியமாய் வெறிச் சோடித் தெரிந்தது.

பட்டினியாய்க் கிடந்தாலும் வீட்டை வீட்டு ஓடிப் போகாதிருந்து உயிர் தப்பிய நாய்கள் சில ஆங்காங்கு, திரும்பி வந்து கொண்டிருந்த மக்களை வரவேற்றன.

சுய மரியாதையை அறுத்து எடைக்கு எடை தராசில் வைக்கும்படி அவை மனிதர்களைக் கேட்பது போலிருந்தது மேரிக்கு.

வீட்டிற்கு முன்னால் நின்ற வேப்பமரம் 'செல்' பட்டு முறிந்து தொங்கியது. நல்ல காலமாய் வீட்டில் அதிக சேதம் ஏற்பட்டிருக்கவில்லை.

சிந்தனையின் திசையை மாற்றவென உள்ளே சென்று புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படித்தாள்.மேரி படிக்கும் போது சில சந்தேகங்கள் மனதில் தோன்றின. அவற்றை ஒரு கடதாசியில் குறித்து வைத்துக் கொண்டாள்.

பல்கலைக்கழகங்களோ அல்லது பாடசாலைகளோ எப்போது திறக்கப்படும் என்று கூற முடியாது. ஆனால் படிப்பது என்பதும் ஒரு பழக்கம் அந்தப் பழக்கம் போய்விட்டால், பிறகு வரவழைத்துக் கொள்வது 'கடினம்.

ஒவ்வொரு நாளும் போகப் போக, நரம்புத் தொகுதியில் சில கலங்கள் மரணித்துக் கொண்டே இருக்கின்றன. இதனால் ஞாபகசக்தி போன்ற உயர் தொழிற்பாடுகளின் வினைத்திறன் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, ஒரு விடயத்தை நாளை கற்பதைவிட, இன்று கற்பது இலகுவானது.

இந்த எண்ணம் மனதில் வந்ததும் மீண்டும் அமர்ந்து படிக்கத் தொடங்கினாள். ஆயினும் நீண்ட நேரம் தனிமையில் படிக்க 'போர்' அடித்தது கதைப்பதற்கு அண்ணாவும் இல்லை. அவர் சவூதிக்குத் திரும்பிப் போய்விட்டார்.

ஊரில் எத்தனை செல்கள் விழுந்த போதிலும் ஊரின் வழமையான நடவடிக்கைகள் பல நின்றுவிட்ட போதிலும், திருமண நடவடிக்கைகளும், வெளிநாட்டுக்குப் பறக்கின்ற நடவடிக்கைகளும் நின்று

போகவில்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு ஊரில் இருந்து மறு ஊருக்குப் போக முடியாதிருந்த நேரத்தில்தான் அண்ணா எப்படியோ வெளிநாடு போய்ச் சேர்ந்தார். சேர்ந்திருக்க வேண்டும் என ஊகம் மட்டுந்தான், கடிதங்கள் எதுவும் யாழ்ப்பாணம் வரத் தொடங்கவில்லை.

கல்யாணங்களும் நின்று போகவில்லை அல்லவா? அம்மாவுக்குப் பணியாரத்திற்குப் பதம் பார்ப்பது தவிர வேறு பிரச்சினை இல்லை போலத் தெரிந்தது. நான்கு வீடு தள்ளி வசிக்கும் சிவப்பிரகாசம் வீட்டில் திருமணமாம் பணியாரம் சுடும் பெண்கள் கோஷ்டியில் இணைந்து கொண்டு அம்மாவும் போய் விட்டா.

அப்பா ஒன்றுக்கு நாலு முறை வீட்டைச் சுற்றிச் சுற்றி நடந்து வந்தார். இதிலே இருந்த பொருளை எடுத்து அதிலே வைத்தார். பின்னர் அதிலே இருந்த பொருளை எடுத்து இதிலே வைத்தார்.

சில சிறிய பொருள்கள் கிளாஸ் போன்றவை உடைந்து போய் இருந்ததையும், சில பொருள்கள் காணாமற் போய் இருந்ததையும் புதிதாகக் கண்டு பிடித்து வந்து மேரியிடம் கூறினார்.

ஆயிரக் கணக்கான உயிர்களை உடைந்து போய்விட்ட சோகம் மூடிக்கிடக்கும் பூமியில், கிளாஸ் உடைந்து போய் விட்டது என்பது மேரியிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அப்பா அது குறித்து அதிகமாகக் கவலைப்பட அண்ணாவுக்குக் கடிதம் எழுதியபோது, உடைந்து போன, தொலைந்து போன பொருள்களின் பட்டியலை எழுதிவிட்டார்.

தடையை மீறி ஓடிய வெள்ளம் சமதரையை அடைந்தது போன்றதொரு நிலை சில தினங்களில் ஏற்பட்டது.

ஊரடங்கு நேரங்கள் தளர்த்தப்பட்டிருந்தன.
'சாவது துன்பம் அல்ல. சாவது போலப் பயப்படுவது தான் துன்பம்'' என்று கரித்துண்டில் மு. வ. சொல்வாரே, அந்தத் துன்பத்தை எல்லாரும் அனுபவித்தாகிவிட்டது. ஒரு நொய்மை நெஞ்சடியில் நிரந்தரமாகிவிட்டது.

மூன்று மாத இடைவெளியின் பின் யாழ்ப்பாண மாநகரப் பகுதிக்கான குடிநீர் விநியோகம் ஆரம்பித்திருப்பதாக வானொலியில் அறிவித்தார்கள். 'அன்புவழி' நிகழ்ச்சியில் ''உங்கள் மழலைச் செல்வங்களுக்குச் சுத்தமான குடிநீரை அருந்தக் கொடுங்கள். அசுத்த நீரை அருந்த விடாதீர்கள். குழந்தைகள் தான் எதிர்காலச் செல்வங்கள்'' என்று அறிவித்தார்கள்.

இவர்கள் இங்கே வரும் வரை எமது மண்ணில் எமது குழந்தைளுக்கு யாருமே சுத்தமான குடிநீர் குடிக்கக் கொடுத்தில்லையோ என்றொரு சந்தேகம் மேரிக்கு ஏற்பட்டது.

அடித்தவனே தடவும் போது ஆறுதல் ஏற்படுமா? ஆத்திரம் ஏற்படுமா?

ஒரு நாள் - மாலை ஐந்து மணி! படித்துக் கொண்டிருந்த மேரி ''அம்மா, நான் குகநாதன் சேர் வீட்டை போய்க் கொஞ்சம் படிச்சிட்டு வறேன்'' என்று சொல்லிக் கொண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவரது பழக்கம் பற்றிக் கிரிஸ்ரோபர் எச்சரித்த பிறகு அவள் குகநாதனைத் தனிமையில் சந்திக்க முயலவில்லை பல முறை குகநாதன் உருவாக்கிக் கொண்ட சந்தர்ப்பங்கள் கிறிஸ்ரோபர் சிந்தனையுடன் ஒத்துப் போவது போலத் தோன்றியபோது, அடி வயிற்றில் குழி பறித்துப் புதிய மண் கொட்டினாற் போல அவளுக்குள் இருந்தது.

ஒருநாள் 'லெக்சர் முடிந்த பிறகு வகுப்பிலேயே வைத்துக் குகநாதன் இவளிடம் சொன்னார்.

''தங்கச்சி மேரி, உம் மோடை ஒரு சின்ன விஷயம் கதைக்க வேணும். நேரம் இருந்தா... ஒருக்கா வீட்டுப் பக்கம் வாரும்...''

அப்போது- உடனே-அந்த வேண்டுகோளை அவள் நிறைவேற்றவில்லை. சில நாட்களில் நாட்டில் குழப்பம் தோன்றி விட்டது. ஆகவே அதைப் பற்றி அவள் யாரிடமும் ஆலோசனை கேட்கவும் இல்லை. கேட்பதானால் கூட.. யாரிடம் கேட்பது? 'கிருப்ஸ்' முற்றாகக் கதைக்காமலே விட்டு விட்டான்.

சகமாணவி வசந்தியின் 'றிஜிஸ்ரேசனில்' கண்டவன் மேரி இருந்த பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

# தொடர்கதை

திடீரென த் தன்னை எல்லாருமே வெறுத்து ஒதுக்கி விட்டது போல ..

புண்ணில் முள்ளால் செதுக்கும் வலி! இப்போது குகநாதனின் வேண்டுகோளைப் பற்றிச் சிந்தித்தாள். நான் அவரது வீட்டிற்குப் போவதற்குச் சாதகமான காரணங்களையும் சிந்தித்தாள். பாதகமான காரணங்களையும் சிந்தித்தாள்.

ஒரு வேளை குகநாதன் உண்மையில் அவளை ஒரு தங்கை போலவே நினைத்து அன்பு காட்டுவதாக இருந்தால் .. இந்த வேண்டுகோளைப் புறக்கணிப்பது அவர்களின் உறவைப் பாதிக்கும். அது அவளின் படிப்பையும், சோதனைகளையும் கூடப் பாதிக்கலாம். எத்தனையோ மாணவர்கள் விரிவுரையாளர்களைக் 'காக்கா' பிடிக்கக் கண்ட கண்ட இடங்களில் 'குட் மோனிங்' சொல்வதும், தேடித்தேடிப் போய்க் கதைப்பதும் அவளுக்கும் தெரிந்த இரகசியங்கள்.

அப்படியிருக்கையில், குகநாதன் தானாகத் தருகிற அன்பை, உதவியைத் தூக்கி எறிவது புத்திசாலித்தனம் என்று கூறமுடியாது. கிறிஸ்ரோபர் சொல்வது ஒரு வேளை உண்மையாக இருக்கக் கூடுமாயினும் அது வெறும் ஊகம் மட்டுமே. அவரது அன்பு கபடத்தனமானது என்பது நிருபிக்கப்படவில்லை.

இறுதியில் குகநாதன் வீட்டிற்குப் போவதற்குச் சாதகமாகவே அவள் மன நீதிமன்று தீர்ப்பளித்த பிறகு, இன்று அவள் புறப்படுகிறாள்.

மழை நீர் ஊறிய மண் வீதிச் சேறுகளில் வண்டி போக மறுக்கிறது,

'சென்றி' யில் நிற்பவர்களின் பார்வை நெஞ்சின் ஆழத்தைக் குத்துகிறது.

பல இடங்களில் இறங்கி நடந்து... பின்னர் ஏறி... குகநாதன் வீட்டில் இருக்கிறார்.

சிறுநீர் கழிக்கவும் வசதியற்ற நிலையில்... கோயில்களில் முடங்கிக் குவிந்து கிடந்த அநுபவங்கள் சில நிமிடங்களுக்குப் பரிமாறப்பட்டன.

தமது வீட்டுக்கு அருகில் ஷெல் விழுந்து ஆறு பேர் ஒன்றாக இறந்து போகச் சடலங்களை வளவுக்குள்ளேயே புதைக்கவும் கூட வழி இல்லாமல் போய்... இறுதியில் நாய்களே இழுத்துச் சென்று கிழித்த அவலத்தைக் குகநாதன் விரிவாக விபரித்தார்.

யாழ்ப்பாணத்திலே ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறு இருக்கு.. ரீ. வி இருக்கு... றேடியோ இருக்கு... நல்ல வசதியா இருக்கீங்க... நீங்க என்ன இல்லையென்று போராட்டம் நடத்திறீங்க..? என்று அவர்கள்... அவர்களில் படித்த ஒருவர்... தன்னை ஆங்கிலத்தில் கேட்ட அநுபவத்தையும் குகநாதன் விபரிக்க இவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

தான் கடதாசியில் எழுதிக் கொண்டு வந்த... படிப்புத் தொடர்பான சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தகுந்த விளக்கம் பெற்றுக் கொண்டாள் மேரி.

திடீரென்று அவர் கேட்டார்.

'பிரச்சினைக்கு முந்தி... கடைசிநாள் லெக்சர்ஸ் நடக்கேக்கை ஒரு 'கொமென்ற்' வகுப்பிலை சுத்தினது தெரியுமா உமக்கு?'

'இல்லை. அது 'போய்ஸ்' பக்கந்தான் சுத்தியிருக்க வேணும் நான் பாக்கேல்லை'

'நான் லெக்சர்' எடுத்துக் கொண்டிருக்கேக்கை கவனிச்சனான். இடையிலை அது நிலத்திலை விழுந்திட்டுது. பிறகு எல்லாரும் மறந்து போய் அதை விட்டிட்டுப் போயிட்டாங்கள். நான் எடுத்து வாசிச்சனான்.

'என்ன எழுதியிருந்தது?'

''கருங்காலிக் கட்டை கடும் 'டிப்' பிலை இருக்குது... ஒருத்தரும் கதைக்கப் போய் வாங்கிக் கட்ட வேண்டாம் எண்டு இருந்தது...'

'... ... ...

கருங்காலிக் கட்டை எண்ட பட்டம் கிருப்ஸ்க்குத் தானே?

(23ம் பக்கம் பார்க்க)

# இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்..

என். கே. தயாளகுணசீலன்

சுடரெறிந்து பிரகாசித்துக் கொண்டிருந்தது அந்த சிறிய மண்ணெண்ணை விளக்கு!

அதன் ஒளியின் வனப்பிலே, வழமைபோலத் தன்னை மறந்த நிலையிலே, நிலத்திலே இருந்த வண்ணம் தட்டித், தட்டி அந்தத் தங்க நகைகளை மெருகூட்டிக் கொண்டிருந்தான் அந்த பொற்கொல்லன்.

இவற்றையெல்லாம் பார்த்தும் பாராமலோ அங்கே ஊசலாடிக் கொண்டிருந்த காற்று சும்மாவா இருக்கப் போகிறது?

அந்தச் சிறிய விளக்கின் ஒளிக் கீற்றிலே மின்னிக் கொண்டிருந்த அந்தச் சிறு குடிசைக்குள் வருவதும் போவதுமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்த அந்தக் காற்று சலனமில்லாமல் எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கை அண்மி,

''சும்மாதான் இருக்க மாட்டேன் என்கிறாயே, கொஞ்சம் அமைதியாக எரிந்தால்தான் என்னவாம்!''

கிண்டலாகக் கேட்டது காற்று.

''என்ன? அமைதியாகவா? நானா? ம்... நீ அமைதியாக இருந்தால் தானே நான் அமைதியாக இருக்க முடியும். நீதான் சும்மா இருக்க முடியாமல் ஆடுவதும், அசைவதுமாகக் கிறுக்குத்தனம் காட்டித் திரிவதற்கு நான் என்ன இரும்பா?

''நீ இரும்பாக இருந்தால் என்ன பித்தளையாக இருந்தால் தான் என்ன எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. உனது துர்வாடையைத் தானே சகித்துக் கொள்ள முடியவில்லை - அதனால் தான் நான் அப்படி இப்படியாகிலும் அசைத்துச் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

உனக்கே தெரியுந்தானே எவ்வளவு துர் வாடைகளையெல்லாம் நான் ஒதுக்கிக் கொண்டு தள்ளி விடுகிறேன் என்று, நீ இப்படிப் படபடவென்று எரித்துத் தள்ளும் இந்த புகை வாடை எனது மேனியில் பட்டால், இந்த பட்டுடல் நசிந்து பதங்கெட்டு விடாதா என்ன? அதுதான் நான் சொன்னேன்.

கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த விளக்குக்கு, என்னத்தைச் சொல்லி இந்தக் காற்றின் வாயை அடைக்கலாம் என்று புரியாமல் எதையெல்லாமோ உளறித்தள்ளி விட்டு, எங்காவது ஓடிவிடலாம் என்பதுபோல் இருந்தது.

தனது தலையைத் திருப்பி பரிதாபகரமாகப்பொற்கொல்லனை ஒரு பார்வை பார்த்து விட்டு,

''ஏய்! காற்றே நீ என்ன, சுயநல வாதியாக இருக்கிறாய் உனது மேனியழகு கெட்டு விடும் என்பதற்காக, நான் இங்கே இந்தப்பொற்கொல்லனுக்கு உதவுவதைக் கூட உன்னால் சகிக்க முடியாமல் இருக்கிறதே,''

''உனக்கு உன்னைப் பற்றித்தான் கவலையாக்கும். எனக்கு அப்படியல்ல இந்தக் குடிசையிலே இற்றைவரை காலமாக எனது ஒளியிலேயே தனது சீவியத்தின் உயிர் நாடியை நம்பி இருக்கிறானே இந்தப் பொற்கொல்லன் அவனைப் பற்றித்தான் எனக்குக் கவலை,''

காற்று ..... குறுக்கே தொடர்ந்தது

''ஓ அவனுடைய குடிசையைத்தான் தஞ்சம் என்றிருக்கிறாயே அதனாலாக்கும்.''

''அப்படிப் பேசாதே. அது அபத்தம்!''

எனது உயிரே வாழ்ந்து கொண்டிருப்பது இந்த ஒரு சொட்டு எண்ணெயினால்தான் அதுவும் இல்லையென்றால் எனது ஆட்டம் முடிந்துவிடும். எனதுகாலம் உருண்டு கொண்டிருப்பது இந்தப் பொற்கொல்லனால் தான். அவனும் இல்லையென்றால் எனது நிலை வேறாகி விடும்.

(23ம் பக்கம் பார்க்க)

# உன்னை நான் சந்தித்தேன்

● கலைக் காதலி



மட்டக்களப்பு புகையிரத நிலையத்தையடைந்த ஆனந்தி தனது கடிகாரத்தைப் பார்க்கிறாள். இன்னும் பத்து நிமிஷம் தான் இருக்கு ரெயின் வெளிக்கிட. செல்லிக் கொண்டே பாலு மாமாவுடன் டிக்கட் எடுப்பதற்காகச் செல்கிறாள். மணி ஓடரைக் காட்டி திருகோணமலைக்குச் செல்வதற்குரிய டிக்கட்டை வாங்கிக் கொண்டாள். தன்னை வழியனுப்ப வந்த மாமாவைப் பார்க்கிறாள். 'மாமா ... செல்லாக்கா என்னப் பார்த்துக் கொண்டு நிற்கிறா. திருகோணமலை ஸ்ரேசனில இறங்கினா அங்கால கொஞ்சத்தூரம் தானே மாமா' நான் தனியப் போவன். செல்லாக்கா பாவம் ஸ்ரேஷனில இறங்கி பிறகு பஸ் எடுத்துத் தான் நிலாவெளிக்குப் போக வேணும்.

'அப்ப சரி ஆனந்தி நான் போயிட்டுவாரன் இறங்கி ஏறுறது எல்லாம் கவனம். போய்ச் சேர்ந்த உடனே கடிதம் போடும். என்ன? கவனமாப்படியும். அப்பநான் போயிற்று வாரன், ஓம் மாமா. கூ... கூ... கூ... ரெயின் ஆனந்தியை அழைக்கவே அவசரமாகப் போய் ரெயினில் ஏறிக் கொண்டு மாமாவிற்கு கையசைத்துக் காட்டினாள். சீட்டில் இருந்த ஆனந்தி மட்டக்களப்பை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டாள். புத்தகமும் கொப்பியும் எண்டு சுமந்த எனக்கு இந்த முற லீவு பெரிய சந்தோஷமா இருந்தது. மாமாட வீட்டில நல்ல பொழுது போக்கு. கதப் புத்தகமும், ரி. வி யும், ரேடியோவும், ஒரு மாசம் போனதே தெரிய இல்ல. இப்ப வீட்ட போனா பள்ளிக்குடமும் நானும் பட்டதுபாடு. ஆவணி மாதம் 12 ம் வகுப்புச் சோதின அதோட அப்பரிட தொண தொணப்பு வேற. எல்லாத்தையும் நினைக்க பெரிய விசராகக் கிடக்கு. ரெயின் போய்ச் சேர எப்பிடியும் இரண்டு மணியாப் போகும். செல்லாக்கா பக்கத்தில இருந்தாலும் என்னவும் அலட்டலாம். அவவும் போய் முன்னால இருந்திட்டா. எனக்குப் பக்கத்தில இருக்கிற இந்தக் கிழவனோட என்னத்த அலட்டுறது. சோகமாக ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்க்கிறாள். முந்திரிய மரங்கள்தான் பூவும் காயுமாக தனது கிளைகளை அசைத்து ஆனந்தியை வழியனுப்பி வைத்தன. இன்னும் அவள் பார்வை அந்த மரங்களைச் சுற்றி சுற்றி வந்தது.

ஐடன்ரிக்காட் ... சத்தம் கேட்டுத்திரும்பினவள்பயந்தே விட்டாள். திரும்பிப் பார்த்த போது ரெயின் ஏறாவூர் ஸ்ரேஷனை அடைந்திருந்தது. அங்கு நின்ற கொமாண்டஸ் தான் உள்ளுக்குள் நின்றார்கள். ஆனந்தியின் பார்வை அந்த

5 கொமாண்டஸ் மேலும் தான் இருந்தது.

நான்கு பேர் அப்படியே நடந்து ஏனைய பெட்டிகளுக் குள் நுழைய ஒருவன் மட்டும் இந்தப் பெட்டிக்குள் நின்று கொண்டான். கதவோரமாகச் சாய்ந்து நின்றவனை ஆனந்தி யின் மனம் ஆவேசமாக திட் டித் தீர்த்தது. எங்க நிண்டு தான் இந்த பிசாசுக் கூட்டம் வந்துதோ தெரியல்ல. இப்ப பெட்டி எல்லாம் கிண்டிக்கிளறப் போருன். ஆனந்தி அவனது தோளில் தொங்கிக் கொண்டிருந்த துவக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள். எத்தனை பேரைத்துளைத் தெடுத்த துவக்கோ! ஆனந்தி யின் மனதில் எங்கிருந்தோ ஒரு பயம் வந்து புகுந்தது. வாசலோரமாக நின்றவன் ஒவ்வொரு ஆண்களையும் கூப் பிட்டு ஏதோ கேட்கத் தொடங்கினுன். ஒரு பொழுது போக்கும் இல்லாமல் இருந்த ஆனந்தி இப்போது அவர் களின் பேச்சிலே தன் கவனத் தைச் செலுத்தத் தொடங்கி ளுள்.

தம்பி ... இங்கே வா? எங்கே போறது? ஐடன்ரிகாட் கொண்டு வா. அவனுடைய கொச்சைத் தமிழ் ஆனந்திக்கு சிரிப்பாக இருந்தது. எங்கே போறது? வாழைச்சேனைக்குப் போறனையா. எங்க ஐடன்ரி? இல்ல ஐயா ... துலைஞ்சு போச்சு. ஆனந்தியின் மனம் படபடத்தது. ஐடன்ரி காட் டில்லாம ஏனடா மடையா வந்தனி. இப்ப உன்ன சுட்டுத் துலைக்கப் போருனே.

எங்க துலைஞ்சது? இப்ப எங்க போறது நீ? ஐயா நான் ஏருவூரில கூலிவேல செய்யிறனையா வாழச்சேனை யில தான் எங்கட அம்மா ஆக்கள் இருக்கிறுங்கள். எங்கட அம்மா செத்துப் போயிற்று. ஐயா ரெயில்வே ஸ்ரெசனுக்கு வாறவழியில தான் எங்கயோ துலைச்சிட் டனையா, அவனுடைய கண் கள் கண்ணீர் சிந்தியது. ஆனந்தியின் கண்களோ அடுத்து என்ன நடக்கப் போகின்றதோ என்று பார்க்க அகல விரிந்தது. ஆனுல் அந்த படைவீரனுே எதுவித சலனமும் இன்றி கண்ணீர் சிந்துகின்ற வனையே பார்த்துக் கொண்டு நின்ருன். சரி.. சரி இப்ப அழ வேணும், நீ இந்த பக்கம் தான் இரு. அங்காலே போக வேணும், சரியா. அங்காலே நிக்கிறவங்க கண்டா எனக்குத் தான் கறச்சல் வறும் சரியா அழாதே போய் இறு. ஆனந் திக்கு படபடப்பு கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது. ஏதோ நல்லவன் என்றபடி யால் விட்டிட்டான் இல் லாட்டி சவமாக்கியிருப்பான். வாழைச்சேனையில் அந்த வாலிபன் இறங்கிய பின்பு தான் ஆனந்திக்கு நிம்மதியே வந்தது, ரெயின் தாளம் போட்டு போய்க் கொண்டே இருந்தது. கயூ .. கயூ... கயூ சத்தம் போட்டவண்ணம் ஒரு யாவாரி அந்தப் பெட்டிக்குள் வந்து சேர்ந்தான். பலரும் அவனைக் கூப்பிட்டனர். கயூ இங்கவா என்ன வில ? நூறு கொட்ட பன்ரெண்டு ரூவா? குறைக்க மாட்டியாடாப்பா, இல்லண்ணே எங்களுக்கு கட் டாது. ம்- சரி இந்தா காசு. கயூ இங்கவா குறைக்க மாட் டியா இல்லண்ணே. இங்கவா இந்த பத்து ரூவா தந்திட் டுப்போ -இல்லண்ணே கட் டாது நாங்க பதினுெருவாயா எடுத்து ஒறுவா வெச்சு விக்கி றம். இன்னும் ரெண்டுறுவாத் தாங்க. சும்மாபோடாப்பா. இப்ப கசுக் கொட்டகாலம். அங்கால எல்லாம் எவ்வளவு மலிவா விக்கிறுங்கள். ஏய் என்றவாறு அந்தப் பக்கம் வந்தான் அந்தப்படைவீரன். நானும் நீயும் சாப்பிடுற மாதிரி அவனும் சாப்பிட வேணும் தெரியுதா? அவன் சொன்ன சல்லியக்குடு. இல் லாட்டி கயூவக்குடு' இன்னும் சத்தம் கேட்டா இங்க உன்ன இறக்கி விடுறது. தெரியுமா? வியாபாரிக்குஇன்னும்ரெண்டு ரூபாவைக் கொடுத்து விட்டு அமைதியாகி விட்டான்.

ஆனந்தியின் மனம் அந்த படைவீரனைப் பாராட்டியது. ஏழை எளியவர்களைச் சுறண்டி வாழும் எங்களுடைய மக்க ளுக்கு உன்னைப்போல பதிலடி கொடுக்கும் நெஞ்சங்கள்நிட்ச யமாக நல்லபாடம் கற்பிக்க வேண்டும். என்ன துணிவு! இவ்வவளவு அட்டகாசமாக அந்த வியாபாரியின் பொருளை எடுத்து விட்டு இப்படி காலாட்டா செய்கிருன். நல்ல காலம் நீ வந்தவேளை. ஆனந்தி தனது மனதிற்குள்ளேயே

**கடமை புரியும் வீரன் கவர்ச்சியை விரும்புவ தில்லை. கடமையாற்றும் நல்லவன் எச்சரிக்கையை விரும்புவதில்லை.**

**-ஷேக்ஸ்பியர்-**

முணுமுணுத்துக் கொண் டாள்.

சிகரட் ஒன்றை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்ட வன் ஒரு கடலைப் பக்கட்டை யும் சேர்த்து வாங்கிக் கொண்டான். அவன் நின்று கொண்டிருந்த பக்கத்து சீட் டில் ஒரு ஏழைத்தாயும் ஐந்து வயது அவளதுமகனும் பிரயா ணம் செய்து கொண்டிருந் தனர். அம்மா எனக்கு கடல வேணும்வாங்கித் தாங்கஅடம் பிடித்து அழுதது. தாய் எவ்வ ளவோ அடக்கியும் பிள்ளை தனது பிடிவாதத்தை விடுவ தாக இல்லை. தாயின் கையில் பணம் இல்லை என்பதை அவ ளது பார்வையும் பிள்ளையை அடக்கிய தன்மையும் வெளிப் படுத்தியது. அந்த படைவீரன் திரும்பி பிள்ளையின் பக்கமா கப் போனன்.

அடடே இவ்வளவு நேர மும் நீ செய்த காரியம் எல் லாம் நல்லம்தான் ஏப்ட பிள்ளைக்கு என்ன செய்யப் போறய்? அழவேணும் எண்டு அதட்டப் போறியா? உன்னக் கண்டாலே பிள்ள இன்னும் அளப் போகுது.

அங்கிருந்த எல்லாருடைய கண்களும் அவனையே பார்த் துக் கொண்டிருந்தன. பிள்ளைக் குப் பக்கத்தில் வந்தவன் தான் வாங்கின கடலைப் பக்கட்டை நீட்டினன். பிள்ளை யின் அழுகை அடங்கியது ஆனல் அது தனது கையை நீட்டி அவனிடம் வாங்கவே இல்லை. அவன் பிள்ளையைப் பார்த்துச் சிரித்தான். சைகை யால் வாங்கும் படி கூறினன். உடனே பிள்ளையும் வாங்கிக்

# சிறுகதை

கொண்டது. ஆனந்தியின் மனம் தனக்குள்ளேயே பேசிக் கொண்டது. படைவீரர் என் ருலே தமிழ் இனத்திற்கு ஒரு தனிப்பயம். ஆனல் உங்களைப் போல நல்ல உள்ளங்களும் இருக்கத்தான் செய்கிறது என் பது இப்போது தான் தெரியும். நீங்களும் மனிதர்கள் தானே உங்களுக்கு இறைவன் இரக்கத் தையே தரவில்லையாக்கும் என்று நினைத்தேன். ஆனல் எங்களை விட உங்களிலும் இரக்க சிந்தையுள்ளவர்கள் இருக்கிருர்கள் என்பது இப் போது தான் தெரிகிறது. உன்னை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை. உன்னைப் பார்த்து சிரிப்பதன் மூலமா வது எனது நன்றியை உனக் குத் தெரிவிக்கலாம் என்று நினைக்கின்றேன். ஆனல் சந் தர்ப்ப சூழ்நிலை எங்களையும் உங்களையும் பகைவர்களாகக் கோடிட்டுக் காட்டுகிறதே என்ன செய்வது.

ரெயின் பொலநறுவையை அடைந்தது. எல்லோரும் இறங்க ஆயத்தமானர்கள் ஆனந்தியும் அவர்களுடன் சேர்ந்து இறங்கி வந்து திரு கோணமலை ரெயினில் ஏறிக் கொண்டாள். ரெயின் வெளிக் கிடத் தொடங்கியது. ஆனந் தியின் கண்கள் அந்த வீரனைத் தான் தேடிக் கொண்டிருந்தது ஆனல் அவன் வரவில்லை கூ...கூ... என்ற சத்தத்துடன் ரெயின் வெளிக்கிட்டது. அந்தப் படைவீரன் பொலநறுவை ரெயில் நிலையத்தில் நின்ற வாறே போகும் ரெயினைப் பார்த்துக் கொண்டு நின்ருன். ஆனந்தி கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருக் கின்ருள்.

## அபூர்வ மனிதர்

பிறந்த நாளும், இறந்த நாளும் ஒரே நாளாக அமைவது மிகவும் அபூர்வம். அதிலும் ஒரு சில புகழ் பெற்ற மனிதர்களுக்கு இந்த மாதிரிச் சிறப்பு ஏற்படுகிறது. அவர்களில் ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரும் ஒரு வர். மிகச் சரியாக 53 ஆண்டுகள் வாழ்ந்த ஷேக்ஸ்பியரின் பிறந்த திகதி 23-04-1564 இறந்த திகதி 23 - 04 - 1616

# "நம்மைச் சுற்றி நடக்கும் அவலங்களை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிக்க முடியாது"

**2வது அருள் சின்னப்பர்**

சிந்தனைக் கட்டுரை ★ யோகி

மனுக்குலம் இரட்சணியம் அடைய வேண்டும் என்று ஆசித்த இறைவன் படிப்படியாக இஸ்ராயேல் சமூகத்தை இதற்குத் தயார் செய்தார். ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பில் ''நான் உன்னைப் பெருங் குடியாய்ப் பெருகச் செய்து, உன்னையும் ஆசீர்வதித்து உன் பெயரையும் மேன்மைப்படுத்துவோம்'' (ஆதி 12: 2) என்று இறைவன் கூறும்போது மனுக்குல இரட்சணியம் சமூகத்தினூடாக நிறைவு பெற வேண்டும் என்பது அவருடைய செயற்திட்டமாக இருந்தது.

இறைவனின் திட்டத்தை நிறைவு செய்யப் பணிப்பு பெற்ற இஸ்ராயேல், உடன்படிக்கையை மீறிப் பாவம் செய்து தூரம் செல்லும் போது இறைவன் இறைவாக்கினர் மூலமாக அதன் பணியை நினைவு படுத்துகின்றார். இறை வாக்கினருக்கு விடுக்கப்பட்ட அழைப்பு இஸ்ராயேல் சமூகத்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பாகும்.

இதன் பின்னணியில் தான் எசெக்கியேல் என்ற இறைவாக்கினரும் அழைக்கப்படுகின்றார். இறைவனின் அழைப்பு ''மனுமகனே! இஸ்ராயேல் வீட்டாருக்கு உன்னை சாமக் காவல்காரனாக வைத்திருக்கின்றோம்'' என்று வருகின்றது. (எசே 3: 17) இந்த அழைப்பில் உள்ள உருவகமும் அதன் கடமையும் பணியும் எது என்று ஆராய்வது இச் சிறிய கட்டுரையின் நோக்கம்.

'உன்னைச் சாம காவல்காரனாக நியமிக்கின்றோம்' என்று இறைவன் கூறும்போது காவல்காரனைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

காவல் காரனைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல உதாரணம் கண்டு கொள்வதென்றால், நாடெங்கும் இராணுவ முகாங்கள் நிறைந்து வழியும் இக்காலத்தில் முகாம் வாயிலில் காவலுக்கு நிற்கும் ஒரு காவல் வீரனை எடுத்துக் கொள்ளலாம். அவன் ஆற்றும் முக்கிய பணியினை மூன்று அங்கங்களாக வகுக்கலாம்.

1. காண்பது அல்லது அவதானிப்பது
2. சீர் தூக்கி ஆராய்வது
3. அறிவிப்பது

## 1. காண்பது அல்லது அவதானிப்பது

வாயிலில் காவல் இருப்பவன் எப்போதும் விழிப்பாகவும் அவதானிப்புடனும் இருக்க வேண்டும். பகலிலும் சரி இரவிலும் சரி விழிப்புணர்வுடன் அவதானிக்க வேண்டும். அபாயம் எப்பக்கம் இருந்தும் வரலாம், கண்கள் சுற்றுடல் சூழலுக்கு திறந்து இருப்பது போலக் காதுகளும் திறந்து இருக்க வேண்டும். காணும் ஒவ்வொரு பொருளையும் போன்று கேட்கும் ஒவ்வொரு ஒலியும் முக்கியமானது. இத்துடன் அண்மையை மட்டும் நோக்குதல் போதாது. பார்வை தூரத்திலும் பதிய வேண்டும். எவ்வளவு தூரம் தெளிவான முற்பார்வை உள்ளதோ அவ்வளவுக்கு நல்லது. அப்போது அந்த காவல் வீரன் தன்னுடைய படையைப் பாதுகாப்பவனாக மாறமுடியும்.

## 2. சீர் தூக்கி ஆராய்வது

விழிப்புடனும் அவதானிப்புடனும் இருக்கும் காவல்வீரன் தன் கண் முன் தோன்றுபவற்றையும் தன் காதுகளில் விழும் ஒலியையும், அடுத்தபடியாகச் சீர் தூக்கி ஆராயக் கடமைப்பட்டவன். ஏனெனில் தூரத்தில் நடமாடும் உருவம் எது? தன் படையா? மாற்றான் படையா? அசைந்தாடும் நிழல் ஒன்று

## இத்தாலியில் முஸ்லிம்கள்

உரோம் நகரில் முதன் முதலாக முஸ்லிம்களுக்கான தொழுகை இடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்நாட்டின் மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் இஸ்லாமியர்கள் இருப்பது சமீபத்தில் தெரிய வந்தது. அதனால் தான் இம்முயற்சி. மக்கள் தொகையில் 98% உரோமன் கத்தோலிக்கர். மீதி உள்ள இரண்டுவீதத்தில் நான்கு இலட்சம் பேர் இஸ்லாமியர். கிறிஸ்தவ சபையினர் முஸ்லிம்களை விடக் குறைவுதான்.

தெரிகின்றதே. அது அபாயத்தின் அறிகுறியா? அல்லது நன்மையின் அடையாளமா? நாலு பக்கமும் இருந்து பல வித ஒலிகள் வருகின்றன. சில சமயம் கேட்கும் வெடிச்சத்தம் பட்டாசு வெடியா இல்லையேல் துப்பாக்கி வெடியா? இவ்வாறு காண்பவை, கேட்பவை யாவற்றையும் சீர்தூக்கி ஆராய்வது அந்தக்காவல் வீரனின் கடமையின் இரண்டாவது பகுப்பாகின்றது.

### 3. அறிவிப்பது :

தன் கண்களினாலும் காதுகளினாலும் அவதானித்து ஆராய்ந்தவற்றையே அந்தக் காவல் வீரன் அறிவிக்கக் கடமைப் பட்டவனாகின்றான். ஏதோ ஓசைவருவதைக் கண்டவுடன் வருவது அபாயம் எனக் குரல் கொடுக்க முடியாது. அதே போன்று அண்டிவருவது நமது நண்பர் என்று வாளாவிருக்க முடியாது. எனவே ஆராய்ந்து அறிந்து கொண்டதை உரிய காலத்தில் உரிய விதத்தில் அறிவிக்க வேண்டியது அவசியமும் கடமையுமாகின்றது.

எனவே எசெக்கியேலிடம் இறைவன் நீ இஸ்ராயேலரின் காவல்வீரன் என்று கூறும்போது எசெக்கியேல் கண்களைத்திறந்து காணவேண்டும். காதுகளைத் திறந்து கேட்க வேண்டும். பின் சீர்தூக்கி ஆராய்ந்து தன்னுடைய முடிவுகளை அறிவிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கின்றார்.

இதனால் தான் இறைவன் தொடர்ந்து எசெக்கியேலிடம் பின்வருமாறு கூறுகின்றார். ''தீயவன் ஒருவனிடம், 'நீ கண்டிப்பாய் சாவாய்' என்று நாம் சொல்ல, நீ அவனுக்கு எச்சரிக்கை செய்யாமலும், அவன் தன் தீயவழியில் நின்று திருந்தி வாழ்வு பெறும்படி நீ அவனிடம் அறிவிக்காமலும் விடுவாயாகில், அந்தத் தீயவன் தன் அக்கிரமத்திலேயே சாவான்; **அவனது இரத்தப் பழியை உன்மேலேயே சாற்றுவோம்.'** (செ. 3:18) இதன்படி எசெக்கியேல் சமூகத்திற்குப் பொறுப்பாளியாக்கப்படுகின்றான். இறைவனுடைய வார்த்தையை அறிவிப்பது அவரது தலையாய கடமையாகிறது. இன்னொரு வழியில் சொல்லப் போனால் தன் சகோதரனை வழி நடத்தவும் அவனது வாழ்வுக்கும் எசெக்கியேல் பொறுப்பாக்கப்படுகின்றார்.

இன்றைய உலகை வழி நடத்தவும், அதன் இரட்சணியத்திற்குப் பொறுப்பாகவும் புதிய எசெக்கியலாகத் திருச்சபை அழைக்கப்பட்டிருக்கின்றது. திருச்சபையென்று கூறும்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்தப் பணியை இன்றைய உலகில் நிறைவேற்ற அழைக்கப்பட்டிருப்பதுடன் நியமிக்கவும் பட்டிருக்கின்றான்.

இதனால் தான் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் பல நல்ல கருத்துக்கள் திருச்சபையில் தோன்றலாயின. இதில் முக்கியமான ஒன்று இரட்சணியம் சமூக சார்புடையது, தனிப்பட்டது மட்டுமல்ல.எனவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் சமூக வாழ்வில் பங்கெடுத்துச் சமூகத்தினூடாகவே தன்னுடைய இரட்சணியத்தையும் உறுதிப்படுத்திக் கொள்கின்றான். ஆரம்ப காலத்தில் எண்ணியது போன்று நானும் என்னுடைய சொந்தத் தனிப்பட்ட வாழ்வும் தான் இறைவனின் சந்நிதியில் கணக்கில் எடுக்கப்படும் என்று இன்று கூற முடியாது. என்னுடைய சமூக வாழ்வும் நான் சமூகத்தில் கொண்ட பங்கும் ஈடுபாடும்

என்ன என்று நிட்சயமாக கேட்கப்படும். இறைவாக்கினர் எசெக்கியேலின் அழைப்பு இதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு. புதிய எசெச்கியலாகிய ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதற்கு விதி விலக்கல்ல. ஒவ்வொருவரும் மற்றவனுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்தவ சமூகம் ஏனைய சமூகங்களின் நல்வாழ்வுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

தொடரும்...

### மகா ஞான ஒடுக்கம்

திருமலை மறைக் கோட்டத்திற்கு உட்பட்ட, நிலாவெளி, கும்புறுப்பிட்டி சாம்பல்தீவு ஆகிய பங்குகளில் மகா ஞான ஒடுக்கம் நிகழ்த்தப்பட்டது. 28-4-89ம் நாள்வெள்ளிக்கிழமை மாலை நிலாவெளிப் பங்கில், கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகா ஞான ஒடுக்கம், தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கு நடாத்தப்பட்டது. மீண்டும் கும்புறுப்பிட்டிப் பங்கில் 7-5-89 முதல் 14-5-89 வரை மகா ஞான ஒடுக்கம் நடாத்தப்பட்டது. தொடர்ந்தும், சாம்பல்தீவுப் பங்கில் 14-5-89 முதல் 21-5-89 வரை மகா ஞான ஒடுக்கம் நடத்தப்பட்டது. இந்த ஞான ஒடுக்க நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த அமலமரித்தியாகிகள் சபையச்சேர்ந்த - அருட்தந்தையர்கள் - ஜெரோம் லம்பேட் - ஜீவாபோல் ஆகிய குருக்கள் நடத்தியது சிறப்புடையதாகும். அநேகமான மக்கள் இந்த மகா ஞான ஒடுக்கத்தில் பங்கு கொண்டு பயனடைந்தனர். மேலும் நிலாவெளிப்பங்கில் 6-5-89ல் ஆயர் L. R. அன்ரனி அவர்களால் 95 பேருக்கு உறுதிப் பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. மூன்று பகுதிகளையும் சேர்ந்த 27 குடும்பங்களின் திருமணங்கள் சீர் படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவை எல்லாம் நிலாவெளிப் பங்குத் தந்தை, L. பிலிப் அடிகளாலும், போதகர் M.I.மைக்கல் அவர்களாலும் - முன்னைநாள் மறை ஆசிரியர் திரு. V. விக்ரர்ஜெயசீலன் அவர்களாலும் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

## பெரிய புல்லுமலை புனித செபமாலை மாதா ஆலயத் திருவிழா

பெரிய புல்லுமலை புனித செபமாலை மாதா ஆலயத் திருநாள் கடந்த 28-04-89 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் செபமாலைபிரார்த்தனை நவநாள் நடைபெற்றன. 6ம் திகதி அருட்திரு சாந்தன் இம்மானுவேல் அடிகளார் தலைமையில் அருட் திரு. ருகல் அடிகளாரின் அனுசரணையுடன் இறுதி நவநாள் நடைபெற்றது. அருட் தந்தையர்கள். அருட் சகோதர, சகோதரிகள், பக்தர்கள் புடைசூழ, அன்னையின் சொரூபம் கோப்பாவெளியில் இருந்து திருப்பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது.

அன்று மாலை 7.00 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தின் கிறிஸ்தோதய கலாமன்றத்தினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. பங்கிலிருந்தும் சிறுர்கள் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டமை பாராட்டப்பட வேண்டியது.

7ம் திகதி காலை 5.00 மணிக்கு முதலாவது திருப்பலியை, எமது பங்கின் முதற் குரு அருட் திரு. திசாநாயக்கா அவர்கள் ஒப்புக்கொடுத்தார். திருநாட் திருப்பலியை மட்/ திருமலை ஆயர் அதி வந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் மூன்று குருக்கள் சேர்ந்து ஒப்புக் கொடுத்தனர்.

இறுதியாக புனித செபமாலை அன்னையின் சொரூபச் சுற்று பிரகாரத்தைத் தொடர்ந்து பங்குத் தந்தை அருட் திரு. சாந்தன் இம்மானுவேல் அவர்களால் சொரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டு, கொடியிறக்குதலும் நடைபெற்றது.

பல ஆண்டுகளுக்கும் பின் நடைபெற்ற இப் பெருவிழாவுக்குப் பக்தர்கள் எதிர் பாராத அளவு வருகை தந்து அன்னையை மகிமைப் படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்

**திரு. G. அன்ரனி**

(16ம்பக்கத் தொடர்ச்சி)

நீ பரந்த வெளியில் சீவிப்பவன் 'நான் இந்தக் குடிசையைத்தான் நம்பியிருக்கிறேனே இல்லையோ அது போகட்டும்! உன்னைப் போல மற்றவர்களைச் சிறுமைப் படுத்தி எடைபோடும் எண்ணம் எனக்கில்லை.'

''உன்னைத்தான் நீ உணரவில்லை, மற்றவர்களையாவது உணர்ந்து நடந்து கொள்ளும் ஒரு பக்குவம் இருக்கக் கூடாதா? ஒரு இங்கிதம் வேண்டாமா?''

விளக்கின் வார்த்தைகள் காற்றுக்கு மனதைச் சுட்டிருக்க வேண்டும்.

கொஞ்சம் பொறு வருகிறேன் என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டு கோபத்துடன் நடந்தது காற்று. சில நொடிப் பொழுதில் 'ஓ''... வென்ற இரச்சலுடன் காற்று பேய்க்காற்றாகப் பவனிவந்து கொண்டிருந்தது. மரஞ்செடி, கொடிகளெல்லாம் அசைந்து பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. குடிசையின் உள்ளே மண், புழுதிகளெல்லாம் ஒன்றாக வரத் தொடங்கின. அந்த அகோர பவனத்தின் வேகத்தோடு தாக்குப் பிடிக்க முடியாமல் விளக்கு அணைந்து கொண்டது.

இருள் கப்பிக் கொண்டதை மட்டும் உணர்ந்த பொற்கொல்லன் ''இதென்ன இளவடி புடிச்ச காத்துடா...' என்று பேசிக் கொண்டு,

தடதடவென்று அந்தக் குடிசையின், வாசல்களை அடைத்தான், காற்று உட்புகும் எல்லா வாயில்களையும் கவனமாக அடைத்துவிட்டு திரும்பவும் விளக்கை சற்று தூண்டி பெரிதாக எரிய வைத்துவிட்டு தனது பணியை தொடங்கினான் பொற்கொல்லன்!

காற்றின் அதிகாரம் வெளியில் மட்டுமே சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்குப் பின் அமைதியாக உள்ளே நுழைந்த காற்று, விளக்கிடம் கேட்டது.

''சௌக்கியமாகத்தானே இருக்கிறாய்!''

''வேறென்ன நீதானே சொன்னாயே, நான் தான் இந்தக் குடிசையை நம்பிச் சீவிப்பவன் என்று''

'சட்' என்று சொன்னது விளக்கு,

''ஓ... அதுவும் சரிதான்! இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியந்தான்.''

மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது காற்று!

(15ம் பக்கத் தொடர்ச்சி)

'ஓமெண்டுதான் நினைக்கிறன்...'

'இதிலை உமக்கும் பங்கிருக்கெண்டு நினைக்கிறன்...'

'அவர் இப்ப என்னோடை கதைக்கிறதில்லை...'

'அப்ப... நீர் 'பூற்ஸ்' குடுத்தது உண்மைதான்...'?

'என்னுடைய சுதந்திரங்களிலை தலையிட வேண்டாம் எண்டு ஒரு நாள் பேசிப் போட்டன்...'

அவர்... நல்ல காலம்... அதற்கு மேல் விபரமாய் ஒன்றும் கேட்கவில்லை. மேரி வேகமாய்க் கதையை மாற்றினாள்.

நீங்கள் வந்து கதைக்கச் சொல்லி அண்டைக்கொரு நாள் சொன்னீங்கள்... அப்ப எனக்கு வர முடியேல்லை... பிறகு பிரச்சினை வந்திட்டுது. என்ன விஷயம் சேர்...?

அவர் சிரித்தார்.

அவரது வீட்டின் சுவர்கள் அந்தச் சிரிப்பைக் கேட்டு மௌனித்திருந்தன.

(தொடரும்)

★

**எந்த ஒரு வாய்ப்பையும் விட்டுவிடாதீர்கள். நீங்கள்பார்க்கும் மனிதர்கள், பொருள்கள், இடங்கள் என அத்தனையிலும் ஓர் அழகு சுடர்விடுகிறது அந்த அழகை இரசியுங்கள். ஏனென்றால் அழகு என்பது ஆண்டவனின் கையெழுத்து.** ★

# பரஸ்பர அன்பு வேண்டும்

உள்ளத்தின் ஆழத்தில் மலர்ந்து வெளிப்படும் ஓர் உன்னத பாச உணர்வே அன்பு. அந்த அன்பு ஆண்டவனால் உலகிற்கு அருளப்பட்ட அருங்கொடை என்றே சொல்ல வேண்டும். அன்பும் அருளும் நிறைந்தவனே இறைவன். அவனது அன்பே நம்மைப் படைத்து. காத்து நிற்கின்றது. ஆண்டவன் தந்த அன்புச் செல்வம் வளர்வதும், பெருகுவதும் மனிதனின் புரிந்துணர்விலும். அவன் அன்பை மற்றவரோடு பகிர்ந்து வாழும் தன்மையிலும் தங்கியுள்ளது. அன்பு பரஸ்பரம் வளரப் புரிந்துணர்வு இன்றியமையாத சாதனமாகும். புரிந்துணர்வோடு, விட்டுக் கொடுத்து நாம் வாழும் போது அன்பு, இறைவனைப் போற்றும் மலராக மலர்கின்றது. அதுவே சமாதானத்தின் சிகரமுமாகின்றது.

ஒருவரோடு ஒருவர்; அயலவரோடு மற்றவர்; நாட்டோடு நாடு' அரசோடு அரசு தம் உள்ளத்தின் புரிந்துணர்வைப் பகிர்ந்து கொள்ளும் அன்புநிலை உருவாகுமானால், அங்கே சமாதானம் நிலைபெறும். வேற்றுமைகளும், வேதனைகளும், போராட்டங்களும் வேரற்றுப் போகும்.

மனிதன், மனிதனிடம் மட்டுமல்ல, உயிருள்ள ஜீவன்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். காகங்களின் தன்னலமற்ற வாழ்க்கையைப் பாருங்கள். உணவைக் கண்டால் தனி ஒரு காகம் அதை உண்பதில்லை. ஏனைய காகங்களையும் அது அழைத்துக் கொள்ளும். இது மனிதகுலத்திற்கு வேண்டிய சிறந்த பாடமாகும். மனித குணமோ வேறு. வாழ்பவனைப் பொறாமைக் கண்ணோட்டத்தில் நோக்கும். வீழ்ந்தவனைத் தூற்றும்: அன்பு செய்பவனைப் பழிக்கும் அவதூறு பேசும்; சுயநலத்தில் செயலாற்றும். இத்தீய உணர்வுகள் மனித உள்ளங்களிலிருந்து எப்போது உடைக்கப்படுகின்றனவோ அப்போது தான் நாம் சிரித்து மகிழும் உலகைக்காண முடியும்.அது எப்போது என்பது தான் இப்போது எழுந்துள்ள கேள்விக் குறியாகும்.

உலகம் இன்று நிம்மதியைத் தேடி ஓடிக் கொண்டிருக்கின்றது. சொல்லொண்ணாப் பேரழிவுகளின் சோகத்தைத் தாங்க முடியாமல் கண்ணீர் வடிக்கின்றது. விலைமதிப்பற்ற பல மனித உயிர்களைப் பலி கொடுத்துக் கலங்கி நிற்கின்றது. காரணம், இன்றைய அரசியல் சித்தாந்தங்களில் அன்பில்லை. மனநீதியில்லை, மனித நீதியில்லை. எனவே தான் உலகம் கண்ணீர் வடிக்கின்றது. ஆறுதலைத்தேடி ஓடுகின்றது.

இவ்வித கோரக் கொடுமைகளிலிருந்து நம் நாடும், மக்களும் கூடத்தப்ப முடியவில்லை. அழிவுகளின் கோரம் பல மனித உயிர்களை, உடைமைகளைப் பலிகொண்டது. பல மக்களை அனாதைகளாக, அகதிகளாக ஆக்கிவிட்டது. துயருற்ற மக்கள் அடைக்கலம் தேடி, ஆறுதல் தேடி அலைந்தனர். இந்த நிலையில் தான் துயருற்ற மக்களுக்கு அன்புக் கரம் நீட்டி ஆறுதல் அளிக்க முன்வந்த கத். மத இஸ்தாபனங்கள் மனிதாபிமான அடிப்படையில் பல காருண்ணிய சேவைகளை அவர்களுக்குச் செய்தும், செய்து கொண்டும் வருகின்றன. ஆண்டவன் அருளிய அன்பின் அடையாளமாக அவர் நாமத்தில் செய்யப்படும் இச்செயல்கள் அனைத்தும் சாதி, சமய வேறுபாடற்ற சமநீதியான சேவைகளே, அதை விட வேறு எந்த வித உள்நோக்கும், இத்தொண்டினைப் புரியும் ஸ்தாபனங்கள் கொண்டிருக்கவில்லை என்பதை இங்கு வெளிப்படுத்திக் கொள்வது பொருத்தமாகும். எனவே இத்தொண்டினைக் குறித்து எவர் எவ்வித குறுகிய கண்ணோட்டத்தில் நோக்கினாலும், கூறினாலும் அது அன்பிற்கு எதிரான. ஆண்டவனுக்கெதிரான செயலாகும்.

'உன்னைப்போல் உன் அயலானையும் நேசிப்பாயாக' 'உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்' என்ற அன்பு மொழிகளை அருளிய இறைமகன் இயேசு கிறிஸ்து மேலும் கூறுகின்றார்.' துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் அடைவர்' என்று, அன்பற்ற நெஞ்சங்களே அவரைக் கொலைக்களம் கொண்டு சென்றன, அவர்கள் தங்கள் சம்பாவனையைப் பெற்றுக் கொண்டனர். அது அவர்கள் விதைத்த வினையே. ஆனால் இறைமகன் இயேசுவின் சிலுவை மரணம் இரச்சணியத்தின் திறவு கோலாயிற்று, அது அனைத்து அக்கிரமங்களையும் வெற்றி கொண்டது.

எனவே அன்பு செய்வோம்! நன்மை செய்யாவிடினும் தீமையைச் செய்யாதிருப்போம்! எதையும் பரந்தளவில் சிந்திப்போம் துயருற்றோரை நேசிப்போம்! அவர்களை வாழ விடுவோம்.

உலகில் அதி சக்திவாய்ந்த ஆயுதம் அன்பு ஒன்றுதான். எனவேதான் 'அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாள்' எனப்பாடினர் பெரியோர், மனிதன் இதனை உணர்ந்து நடந்தால் பாச உணர்வுகள் உள்ளங்களில் பூத்து மலர்ந்து வேற்றுமைகளும் வேதனைகளும் நீங்கி, உலகம் சிரித்து வாழும். அதுவே நாம் ஆண்டவனுக்குச் செய்யும் பிரதி அன்பாகும்.

**எஸ். ரி. ஸ்ரீபன்**

# ஈழத்து நாடகங்களுக்கு ரூபவாஹினிதான் அளவுகோலா?

## செ. கு. வின் கருத்துக்கு மறுப்பு

கடந்த ஜூன் மாதத் தொண்டனில் இரவலும், துருவலும் பகுதியில் 'பத்து வருடம்' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கிறார் ரஜவெலயைச் சேர்ந்த திரு. ந. பார்த்திபன் அவர்கள். அவரது கடிதத்தில் பொருத்தமான பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. இ. ஆ.

ஆசிரியர்.
தொண்டன்

1989, ஜூன் தொண்டன் சஞ்சிகையில் செ. குணரத்தினம் எழுதிய இரவலும், துருவலும் என்ற பகுதியில் பத்து வருடம் என்ற தலைப்பில். கங்கை ஆசிரியரின் கருத்துக்குப் பல கருத்துக்கள் தினகரனில் பிரசுரிக்கப்பட்டதும், பின் ரூபவாகினியில் ஒளிபரப்பப்பட்ட நாடகங்களைப் பார்த்ததும் பகீரதனின் கருத்து தள்ளிவிட முடியாததென்றும், நம்மவர்க்கு உண்மைஎப்போதும் கசப்பான மாத்திரையே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

முதலில் அந்த நாடகங்களை மட்டுமோ, அல்லது இதுகாலமும் வாஹினியில் ஒளிபரப்பப்பட்ட நாடகங்களையும் சேர்த்து ஒப்பு நோக்கினாலும் இக்கூற்று உண்மையிலும் உண்மை ஆனால் இக்கூற்று ஏனைய நாடகங்களுக்கும் பொருந்துமா? மேலும் சிறுகதை, நாவல், விமர்சனம் என்பவற்றுக்கும் பொருந்துமா?

ரூபவாஹினிதான் ஈழத்து நாடகங்களுக்கு அளவுகோலா? வானொலி நாடகங்கள் கவனத்திற் கொள்ளப்படக் கூடாதா? ஜனாதிபதி பரிசு பெற்ற தாசீயஸின் பொறுத்தது போதும், பாலேந்திராவின் 'கண்ணாடி வார்ப்புக்கள்' யாழ் - பல்கலைக்கழக மாணவர்களின் 'மண் சுமந்த மேனியர்' என்பன புறக்கணிக்கப் படுவதா?

ஏதோ நம் நாட்டுக் கலைஞர்களின் துரதிஸ்டம் ஒரு சிலரே வாஹினியை ஆக்கிரமித்து, அலங்கரிப்பதாக நினைத்து அவலட்சனப்படுத்துகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்காத, செல்வாக்கற்ற குழுக்களினால் உருவாக்கப்பட்ட எத்தனையோ நாடகங்கள் வாஹினியில் ஒளிபரப்பப்படவில்லை. அவை இலைமறை காயாக, இனங்காணப் படாத நிலையில் 'அவளைக் கொன்றவள் நீ' ஆட்சி பீடமேறிவிட்டது.

சனி இரவு 9.30ற்கு வானொலியில் ஒளிபரப்பப்படும் நாடகங்களோ, தொடராக ஒளிபரப்பப்படும் சில நாடகங்களோ இதுவரை வானொலியில் ஒளிபரப்பப்பட்ட எஸ். வி. சேகர், கிரேஸி மோகன், காத்தாடி ராமமூர்த்தி என்பவர்களுடைய நாடகங்களுடன் ஒப்பிடுமிடத்து தரம் குறைந்தவையல்ல.

இரண்டாவதாக சிறுகதைத் துறையை எடுத்துக் கொள்வோம், விகிதாசாரப்படி இலட்சக்கணக்கான எழுத்தாளர்களில் தரமான எழுத்தாளர்களும், ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களில் தரமான எழுத்தாளர்களும் என்ற வகையில் ஒப்பு நோக்கின் கங்கை ஆசிரியரின் கூற்று மறுக்கப்பட வேண்டியதே.

அண்மையில் மல்லிகையில் ச. முருகானந்தம் எழுதிய கட்டுரையினை நோக்கின் ''ஈழத்து எழுத்தாளர்கள் தரமான ஆக்கங்களைப் படைப்பதற்கான காரணம் அவர்கள் 'எழுத்தை' நம்பியிருக்கவில்லை. ஆனால் தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் எழுத்தைப் பிழைப்பாகக் கருதுவதால் 'கண்டதும்' எழுதும் போக்கு காணப்படுகிறது.

'கண்டதும்' எனும் போது திகிலூட்டும், கிளுகிளுப்பூட்டும், செயற்கைக் கவர்ச்சி உத்திகளைக் கையாளும் தன்மையினை அவதானிக்கலாம். மேலும் எத்தனை படங்கள் வெளியிடப்பட்டு எத்தனை தரமானவை என்று பார்க்க வேண்டும். வியாபார நோக்கு உருவானபின் தரமான கலையை எதிர்பார்க்க முடியுமா? அது சாத்தியப்படுமா?

தமிழ் நாட்டில் தி. ஜானகிராமன், புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், ஆதவன், கரிச்சான் குஞ்சு......என்று தொடர்வது போல், ஈழத்திலும் செ. கதிர்காமநாதன், எஸ். பொன்னுத்துரை, கே. வி. நடராஜன், செ. கணேசலிங்கன், காவலூர் ஜெகநாதன்......என்ற தொடரும் பெருகிறது.

ஈழத்துச் சிறுகதைகள் பல தமிழ் நாட்டுச் சிறுகதைப் பரிசுகளை தட்டிக்கொண்டதும், பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டதும் சான்றாக உள்ளன.

ஆக, செ. குணரத்தினம், கங்கை ஆசிரியர் கருத்தை ஏற்பதும், நம்மவர்க்கு உண்மை எப்போதும் கசப்பான மாத்திரை என்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதில்லை. உண்மை சுடும், உண்மை கசப்பானது தான். ஆனால் எது உண்மை?

# நிறைவு

''எங்கே முழுமை பெறுவேன் இறைவா
அங்கே அழைப்பாய் விரைவாக''

அடியான் ஒருவன் இறைவனிடம், வரம் வேண்டித் தவமிருந்தான். இறைவன் அவனுக்குக் காட்சியளித்து உனக்கு மூன்று வரம் கேட்க அவகாசம் தருகிறேன்; உடனே கேள் என்று கூறினார். ''என்னுடைய மனைவி சாக வேண்டும்'' என்று கேட்டான், அப்படியே நடந்தது. முதல் வரமும் முடிந்தது. இறந்த வீட்டிற்கு வந்தவர்கள் எல்லாரும் அவன் மனைவி செய்த நன்மைகளையெல்லாம் சொல்லிப் புலம்பி அழுதார்கள். மனைவியை இழந்து விட்டேனே என நினைத்து மனைவி உயிர் பிழைக்க வேண்டும் என வரம் கேட்டான். மனைவி பிழைத்தாள். இரண்டாவது வரமும் முடிந்தது. இன்னுமுள்ளது ஒரேயொரு வரம். அடியானுக்கோ எதைக் கேட்பது என்ற திண்டாட்டம். சாகா வரத்தைக் கேட்போமா? சாகா வரத்தைக் கேட்டும் நோயுற்று வாழ்ந்தால் பயன் என்ன?

நோயற்ற வாழ்வைக் கேட்போமா? நோயற்ற வாழ்விருந்தும் பணம் இல்லாமல் என்ன பயன்?

நிறைந்த செல்வத்தைக் கேட்போமா? நிறைந்த செல்வமிருந்தும் நல்ல நண்பர்கள் இல்லாத வாழ்வு தனிமை தானே.

எதைக் கேட்பது என்று அறியாமல் இறைவனிடம் கேட்டான்.

'இறைவா! நீயே சொல்லு' நான் எதைக் கேட்கட்டும்?

உயிரா, பணமா, சுகமா, செல்வமா, நண்பர்களா?

இறைவன் கூறினார், 'மனிதா! வாழ்க்கையில் எது வந்தாலும் எச் சூழ்நிலையிலும் நிறைவு பெற்றவனாக இருக்க வேண்டும்'' எனக் கேள்' என்றார், இறைவன் கூறிய பதில் எமது சிந்தனையையும் தட்டி விட வேண்டும். இன்றைய உலகிலே மனிதன் நிறைவற்றவனாக, முழுமையடையாதவனாக இருக்கின்றான்.

காரணம்அவன் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. நினைக்காததெல்லாம் நடக்கின்றது. அவன் கேட்பதெல்லாம் கிடைப்பதில்லை, கேட்காததெல்லாம் கிடைக்கின்றது, அவன் விரும்புவதெல்லாம் பெற்றுக்கொள்வதில்லை, விரும்பாததெல்லாம் அவன் மேல் திணிக்கப்படுகின்றது.

பணம், பொருள், இன்பம், காமம், கற்பின்மை, ஒழுக்கக்கேடு, வஞ்சகம், ஊழல் இவையனைத்திலும் நிறைவை அடைவதில்லை. பலவிதமான போராட்டங்கள் எதிலும் நிறைவு இல்லை. நிறைவை அடையமுடியாதா என்ற வினா எல்லா உள்ளங்களிலும் எழலாம். நிறைவை அடைவது முழுமை எய்வது என்பது அடைய முடியாத இலக்கன்று அடையமுடியும். ''எப்படிப்பட்ட நிறைவை நாம் இங்கு சிந்திக்கின்றோம் என்றால் பூரண உடல் வளர்ச்சியையோ அல்லது உள்ளத்தின் முதிர்ச்சியையோ அல்ல மாறாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை அல்லது நிறைவைப் பற்றித்தான் நாம் இன்று சிந்திக்கின்றோம். கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி என்பது அன்பினால் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்த ஒரு பக்குவ நிலையைத் தான் யாம் இங்கு குறிப்பிடுகின்றோம். இயேசு சொன்னார் ''உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்'' (மத். 5/48)

ஒவ்வொரு கிறிஸ்தவனின் குறிக்கோளும் இத்தகைய முழு நிறைவை நோக்கியதாகவே இருக்க வேண்டும் நிறைவை எய்திய புனிதரெனப் போற்றும் சின்னப்பர் ஓரிடத்தில் கூறுகின்றார்.

''நான் நிறைவு எய்து விட்டேன்.'' என்று சொல்வதற்கில்லை. அதைப் பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு ஓடுகிறேன்'' (பிலிப். 3 / 12) அதே சின்னப்பர் வேறொரு இடத்தில் எழுதுகின்றார்.

''நமது அறிவு குறைவுள்ளது ,நமது இறைவாக்கும் குறைவுள்ளது, நிறைவுள்ளது, தோன்றும்போது குறைவுள்ளது மறைந்துவிடும்'' (1கொ. 13/ 10)

நிறைவு பெற்ற மனிதனுக்கு அடையாளமாக, மாதிரியாக விளங்குபவர் யேசுக்கிறிஸ்து. அவரில் அனைவரும் நிறைவு காண வேண்டும். அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதித்ததன், நோக்கம் ''கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரையும் நிறைவுள்ளவராக்கு வதேயாகும்'' (கொலோ. 1 - 28)

பி. ஜோசப்

# விவிலியப் புதிர் - 11

நற்செய்திகளைப் படிக்கும்போது இயேசு செய்ததாகக் கூறப்படும் புதுமைகளும், வல்ல செயல்களும், அருங்குறிகளும் எம்மைக் கவர்ந்திழுக்கின்றன. கீழே தரப்பட்டிருக்கும் சில இலக்கங்களுக்கும், புதுமைகளுக்கும் தொடர்புண்டு. இலக்கங்களின் துணைகொண்டு புதுமைகளை அடையாளங் காணுங்கள் பார்ப்போம்.

1. 12 ஆண்டுகள் ........................................
2. 10 பேர் ........................................
3. ஏறக்குறைய 2000 ........................................
4. 38 ஆண்டுகள் ........................................
5. 200 வெள்ளிக்காசு ........................................
6. 4ம் சாமம் ........................................
7. 12 வயது ........................................
8. 6 கற்சாடிகள் ........................................
9. 4 நாள் ........................................
10. 18 ஆண்டுகள் ........................................

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

பரிசு: 50/-, 25/-

முடிவுத் திகதி: 30 - 07 - 89

# தன்னாமுனை

## கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம் புனரமைப்பு

தன்னாமுனை கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம் 21-01-1989 அன்று மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது. இது தற்போது கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியமாகப் பெயர் கொண்டு இயங்க ஆரம்பித்திருக்கின்றது.

இது மட்டக்களப்பு கிறிஸ்தவ வாழ்வுச் சமூக உறுப்பினர்களான திரு. ஜோன் பொஸ்கோ அவர்களாலும், திரு. இன்னாசி அவர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு எமது பங்குத் தந்தை வண பிதா A. அருளானந்தம் அவர்கள் தலைமை தாங்கினார்.

இக்கழக அங்கத்தவர்களுக்கு ஆரம்பிப்பாளர்களால் பல அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் எமது பங்குத் தந்தையை ஆலோசகராகக் கொண்டு உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

உத்தியோகத்தர் தெரிவின் போது தலைவராக R. நிர்மலாவும், உப தலைவராக T. மரியதாஸும், செயலாளராக V. டனிஸ்ரனும், உப செயலாளராக A. யேசுராசம்மாவும் பொருளாளராக P. அன்ரனிராஜும் தெரிவு செய்யப்பட்டனர். இது தற்போது மிகவும் ஊக்கமாக இயங்குகின்றது.

தகவல்

கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியம்

20-05-1989 தன்னாமுனை.

முற்பகலில் மற்றவர்களுக்குத் துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே துன்பங்கள் தாமாக வந்தடையும். —திருக்குறள்

## விவிலியப் புதிர் - 9

### முடிவுகள்

1. சின்னப்பர்
2. இராயப்பர்
3. யாகப்பர்
4. பிலிப்பு
5. முடியப்பர்
6. அனனியா
7. அகபு
8. சிறைக்காவலன்
9. அக்ரிப்பா
10. கமாலியேல்

### பரிசு பெறுவோர்.

**1ம் பரிசு:**

**சா. சியாமளி**
40, தபாற் கந்தோர் வீதி
திருகோணமலை.

**2ம் பரிசு:**

**இ. திருச்செல்வம்**
புனித சூசையப்பர் குருமடம்
விமான நிலைய வீதி
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்.

1. **எலெக்ஸ் சுதர்ஷன் சுந்தரலிங்கம்**
மாகின்கந்த, இல 1, தெஹியோவிற்ற
2. **யோ. யா. இராசரத்தினம்**
100, முதலியார் வீதி, திருகோணமலை.
3. **எஸ். ஜக்தலின்**
18/6, மத்தியாஸ் வீதி, மட்டக்களப்பு.
4. **யோ. ருகினி**
வீச்சுக்கல்முனை, மட்டக்களப்பு.
5. **சுதா - யேசுதாசன்**
312, பழைய கல்முனை வீதி
'மஞ்சணம்'
நாவற்குடா, மட்டக்களப்பு.

போட்டியில் பங்குபற்றியோர் - 94
சரியான விடையளித்தோர் - 89

அனைவருக்கும் எமது நன்றி.

# உங்கள் பக்கம்

### சுடச் சுட

ஜூன் மாதத் தொண்டன் சுடச் சுட முதல் வாரத்திலேயே கிடைத்தது. 'திசை மாருத தியாகங்கள்' சிறுகதை எமது சமூகத்தை அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டியது.

**கைலைநாதன்**
நிலாவெளி

### செபிக்கிறேம்

ஜூன் மாதத் தொண்டனில் இடம் பெற்ற 'நெஞ்சம் மறப்பதில்லை' கட்டுரை மிக நன்ருக இருந்தது. அருள் திரு சந்திரா அவர்களின் ஆன்மா சாந்திபெறச் செபிக்கின்ரேம்.

**குணசீலன், அன்ரனிதாஸ்**
சின்ன உப்போடை

### சப்பாகிவிட்டது

இடைவெளி நிரப்பும் துணுக்குகளை பாராட்டுகின்றேன். அதேவேளை ஒரே துணுக்குகளை இரண்டு பக்கங்கள் போடுவது விரும்பத்தக்கது அல்ல.

'சமயங்கள் வேண்டாம் ஆன்மீகம் வேண்டும்' என்ற கட்டுரைத் தலைப்பைப் பார்த்து ஏதோ நினைத்தோம். படித்ததும் சப்பாகிவிட்டது. அப்போஸ்தலர் பணி, 'உன் இதயம் எங்கே இருக்கிறது' கட்டுரைகள் மிகவும் பயனுள்ளவை.

**நோபட் பர்ஞந்து**
கொழும்பு - 13

### பிஸியோ?

எங்கே சார் வாயாடி வண்டு மணியை பல மாதங்களாகியும் காணவில்லை. 'பிஸி'யாக இருக்கிருரோ? கோகிலா மகேந்திரன் எழுதும் தொடர்கதை அடுத்து என்ன இடம் பெறப் போகிறதோ என்ற ஆவலைத் தூண்டுவதாக உள்ளது.

**M. அன்ரன்**
பாலையூற்று

### கறண்ட் சப்ஜெக்ற் கவிதை

தொண்டன் 'மே' இதழ் கண்டேன். கனதியான விடயங்கள் இடம் பெற்றிருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்கு ஒரு மல்லிகை, மட்டக்களப்பிற்குத் தொண்டன். ஆக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் திருப்தியைத்தந்தன கறண்ட் சப்ஜெக்ற்றில் வ.கவைத்து கவிதை படைப்பதில் கவிஞர் செ. குணரத்தினத்திற்கு நிகர் அவரேதான்.

**இ. நௌசாத்**
ஏறுவூர்

### 'திறில்'

சந்தனச் சிதறல்கள் தொடர்கதை மிகவும் 'திறிலாக' இருக்கிறது. தொடரட்டும் தொடர்கதை.

**அ. செல்வருயன்**
கல்முனை - 2

### தொடரட்டும்

1989 ஜூன் தொண்டன் சஞ்சிகையினைப் படித்து இரசித்தேன். எனது குரலாக ஒலித்த அந்த ஆசிரியர் கருத்து மிக மிக நன்று. தொடரட்டும் பணி.

கறுவாக்கேணி முத்துமாதவனின் சிறுகதை அந்தச் சூழலையும், அம்மக்களின் மனநிலை, உணர்வுகளைச் சிறப்பாகக் காட்டியுள்ளது.

**ந. பார்த்திபன் B. A.**
ரஜவெல

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்

நாள் : 4 - 7 - 89

நேரம் : மாலை 6 - 45 மணி

- சிறுவர் உலகம் -

விவிலிய நாடகம்

எழுதியவர் : கலைமணி

★

நாள் : 9 - 7 - 89

நேரம் : மாலை 7 - 00 மணி

- புதிய உலகம் -

❀ சுதேசக் குருக்கள் தினத்தை ஒட்டிய சிறப்புச் செய்தி.

வழங்குபவர் : அருள் திரு. இக்னேஸ்ஜோசப்

❀ பேசும் பாத்திரம்

- விவிலியச் சித்திரம் -

❀ விவிலியப் போட்டி

★

நாள் : 15, 16, 17 - 7 - 89

நேரம் : காலை 5 - 50 மணி

❀ கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர் : திரு. எஸ். எஸ். யேசுதாஸ்

★

நாள் : 18 - 7 - 89

நேரம் : மாலை 6 - 45 மணி

- சிறுவர் உலகம் -

❀ குறுநாடகம்

எழுதியவர் : திருமதி. அகுஸ்தீன்

★

நாள் : 23 - 7 - 89

நேரம் : மாலை 7 - 00 மணி

- புதிய உலகம் -

❀ 'நம்முள் வளரும் நாற்றுகள்' (சுதேசக் குருக்கள் உருவாக்கத்தின் நூற்றாண்டு நிறைவு நினைவுச்சித்திரம்)

எழுதியவர் : அருள்திரு. தேவதாசன்

★

நாள் : 29, 30, 31 - 7 - 89

நேரம் : காலை 5 - 50 மணி

❀ - கத்தோலிக்க நற்சிந்தனை -

வழங்குபவர் : அருள்திரு. இக்னேஸ்ஜோசப்

★

நிகழ்ச்சி தொகுப்பு : மலர்வேந்தன்

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 01 - 7 - 89ல் வெளியிடப்பட்டது.

Composed by: Miss, K. Sarojathevi N. A. B (Trainee)